தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 66 மலர் 10

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2023

துணர் : 66 பிரமோதூத — தை மலர் : 10

ஜனவரி — பிப்ரவரி 1992

உள்ளுறை பக்கம்

1. கவிமணியின் கடவுட் கொள்கை ... 434
முனைவர் பெ. சுப்பிரமணியன்

2. பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி பட்டப்படிப்புப்
பாடநூல் வெளியீடுகள் திறனாய்வு 448
திரு. அ. கி. மூர்த்தி, எம். ஏ., பி டி.,

3. அமைப்பு மையவாதம் :
கிடங்கும் தொழிற்சாலையும் 456
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)
நோயல் ஜோசப் இருதயராஜ்

4. வேதியியலுக்குத் தனிமொழி
தேவைதானா ?
(Esperento for Chemists) 458
பேராசிரியர் வி. அ. இளவழகன்

5. திருக்குறள் கூறும் செய்ந்நன்றி
அறிதல் — ஓர் ஆய்வு II 462
ஆ. இரத்தினம்
(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

6. தமிழோடிணைந்த வாழ்வுநெறி 470
முனைவர் இராதா செல்லப்பன்

7. உரைநலம் 477
இளங்காடு க. சிவசாமி

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

,, கலைமாச்செல்வர் எஸ்.டி.காசிராஜன் ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை, சென்னை.

,, சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.,பி.எல்.,பிஎச்.டி
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

,, முனைவர்சி.பாலசுப்பிரமணியன்,எம்.ஏ.,எம்.லிட்,பிஎச்.டி.,
துணை வேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

,, முனைவர் தமிழண்ணல், எம். ஏ., பி எச். டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மு. கோவிந்தராசன்
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

,, முனைவர் சோ. ந. கந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்.

,, முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக் கழகம்

,, தமிழ்த்தொண்டர். கோ.முத்துப்பிள்ளை, பி.ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர் சென்னை.

,, முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பி எச்.டி.,
தமிழ்முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

,, பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர். செ. இராசு எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சை.

,, புலவர் ஆ. பாலன், எம்.ஏ., எம். ஃபில்.,
துணைமுதல்வர். த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

,, புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., பி. எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவர மேனிலைப்பள்ளி

,, முனைவர் பா. மதிவாணன், எம்.ஏ., எம். ஃபில்., பிஎச்.டி.,
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

கவிமணியின் கடவுட் கொள்கை

முனைவர் பெ. சுப்பிரமணியன்,
தமிழ் விரிவுரையாளர்,
அ.வீ.வா.நி.திரு.புட்பம் கல்லூரி,
(தன்னாட்சி) பூண்டி.

முன்னுரை :

தமிழ்க் கவிதையுலகில் அழியா இடம்பெற்ற இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை குறிப்பிடத்தக்கவராவார். இந்நூற்றாண்டின் ஏற்றமிகு கவிஞர் வரிசையில் பாரதியார், பாரதிதாசன் ஆகிய இருவரையும் அடுத்த சிறப்பிடத்தைக் கவிமணி பெற்றார். பாரதியார் 1882-ஆம் ஆண்டும் பாரதிதாசன் 1891-ஆம் ஆண்டும் தோன்றினர். கவிமணி முன்னைய இருவருக்கும் முன்பு 1876-ஆம் ஆண்டிலேயே தோன்றினார். ஆயினும் முன்னைய இருவரும் நாட்டு விடுதலை, சமுதாய விடுதலை ஆகிய பாடுபொருள்களில் கனல்கக்கும் கவிதைக் கணைகளை வீசியதனால், பாமரர்க்கும் உணர்ச்சியூட்டிய நிலையில் — மக்களை ஈர்த்த நிலையில் முதலிரு இடங்களைப் பெற்றனர். ஆனால் கவிமணியோ,

> "பெண்மை, தண்மை, எளிமை இம்மூன்று பண்புகளுமே, கவிமணியின் பாடல்களில் உள்ளும் புறமும் அமைந்துள்ளன எனலாம். கருணை, அன்பு, ஆழ்ந்த கடவுள் பக்தி ஆகியவை இவர் கவிதையின் அடிப்படை ஊற்றுக்களாகும்" 1

என்று எம். ஆர். அடைக்கலசாமி கூறுவது போன்று, ஆழ்ந்த கடவுள் பக்தியுடன் கருணையும் அன்பும் நிறைந்த பாடல்களைப் பாடினார்.

இம்மூவருள் பாரதிதாசன், மற்றைய இருவருக்கும் பின்னர்த் தோன்றிக் கடவுளைப் பாடத்தொடங்கி, முடிவில் கடவுள் மறுப்புக் கவிஞராகச் சிறந்து, இருவருக்கும் பின்னே மறைந்தார். பாரதியோ, தமிழ்ச்சைவ உலகில் திருநாவுக்கரசருக்குப் பின்னே தோன்றி முன்னர் இறைவனடி அடைந்து திருமுறை வரலாற்றில் முதலிடம் பெற்ற திருஞானசம்பந்தரைப் போன்று[2] கவிமணிக்குப் பின்னே தோன்றி முன்னர் மறைந்தார். கவிமணியைப் போலவே பாரதியும் மிகச் சிறுவயதிலேயே கவிதை பாடத் தொடங்கிக் கடைசி வரை கடவுளைப் பாடினார். பாரதியின் கடவுட் பாடல்

களில் மரபில் மாற்றம், புதுமை (கண்ணன் பாட்டு) இருக்கிறது. கவிமணியின் கடவுட்பாடல்களில் மரபு போற்றும் பாங்கு உள்ளது. அன்பும் அருளும் கடவுள்நெறிக்கு இருகண்கள். இவ்வுயர் பண்புகளைத் தம் வாழ்வில் கடைப்பிடித்துக் கவிதைகளில் அவற்றைப் புலப்படுத்தித் தாம் வாழ்ந்த காலத்திலேயே சான்றோரால் போற்றப்பெற்ற கவிமணியின் கடவுட் கொள்கையைக் காண்பது தமிழுலகிற்கும் பயன்நல்கும் என்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கடவுட்கொள்கையும் கவிமணியும்

மனிதகுலம் பல்வேறு நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. உலகில் மிக மூத்த நாகரிகச் சிறப்புடைய மனித இனங்களெல்லாம் கடவுள், உயிர், மறுபிறப்பு, ஊழ், துறக்கம், நரகம் ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளன. நம்பிக்கையின்றேல் வாழ்க்கையில்லை. கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் தன்னம்பிக்கையுடையவர்களாயிருக்கலாம். அவர்களும் ஏதாவது ஒரு சூழ்நிலையில் தம்மீது நம்பிக்கை குறையும்போது தமக்கு அப்பாற்பட்ட ஏதாவது ஒன்றை — ஓராற்றலைப் பற்றுக்கோடாக நம்பியே தீருவர். இயற்கைப் பொருள்களின் — ஐம்பூதங்களின் ஆற்றல் கண்டு அஞ்சிய தொல்பழங்கால மாந்தர் அவற்றை வழிபடத் தொடங்கியிருந்தாலும், காலப்போக்கில் கடவுள் நம்பிக்கை, வழிபாடு, சடங்குகள் ஆகியவை சிந்தனையடிப்படையிலேயே தோன்றின என்பதுதான் கடவுள் நெறியை விளக்கும் சிந்தனையாளர் கருத்து. திருநாவுக்கரசர்,

> "அஞ்சியாகிலும் அன்புபட் டாகிலும்
> நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ
> இஞ்சி மாமதில் எய்திமையோர் தொழக்
> குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே"[3]

என்னும் பாடலில் அச்சம், அன்பு இரண்டில் ஒன்றையேனும் கடைப்பிடித்து இறைவனை நினைக்குமாறு நெஞ்சிற்கு அறிவுறுத்துவது சிந்திக்கத்தக்கது.

புண்டை நாகரிக மக்களில் சிறந்த எகிப்தியர், பாபிலோனியர், சால்டியர், எபிரேயர் ஆகியோர் முழுமுதற் கடவுளை அம்மையப்பராகவே வழிபட்டனர் என்பதைச் சான்றுகளுடன் மறைமலையடிகள் விளக்கியுள்ளார்[4], பழந்தமிழரும் கடவுளை அம்மையப்பராக (உமையொருபாகராக) வழிபட்டு

வந்தனர். காலப்போக்கில் சிவவழிபாட்டிலிருந்து அம்மை வழிபாடு (சத்தி வழிபாடு) தனியே பிரிந்து, மேலும் மாற்றம் பெற்றுத் திருமால் வழிபாடாயிற்று என்பது மறைமலையடிகள் போன்ற சான்றோர் கருத்து. திருமாலே சிவபிரானுக்குத் தேவி என்பதை,

"அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே"[5]

என்னும் திருநாவுக்கரசர் வாக்கினால் உணரலாம். இவ்வாறு பழந்தமிழர் நிலத்தெய்வங்கள், சிறுதெய்வங்கள் எனப் பல தெய்வங்களை வழிபட்டனராயினும் முழுமுதற்கடவுள் ஒன்றென்னும் உறுதியும் உடையவராயிருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது. வடமொழி வேதங்களில் பல தெய்வ வழிபாடு (Polytheism) பேசப்பட்டிருப்பினும் ஒரு தெய்வ வழிபாடு (Monotheism) பற்றிய சிந்தனையும் உண்டு என்பர்.

> "வேதத்திலுள்ள ஒரு சுலோகமே 'ஒன்று தான் உள்ளது. அதனையே அறிஞர்கள் அக்கினி என்றும், யமன் என்றும் வெவ்வேறு பெயர்களால் குறிக்கின்றனர்' என்றும் கூறுகின்றது. வேதத்திலே முக்கியமாகப் பேசப்படுவது ஒருதெய்வக் கொள்கையே என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை"[6]

என்று அறிஞர் கூறுவர்.

முழுமுதற்பொருளின் வரம்பிலாற்றலில் பழந்தமிழர் கொண்டிருந்த நம்பிக்கை, வழிபாடு ஆகிய மரபு வழிப்பட்ட கொள்கைகளைக் கவிமணி முழுமையாக ஏற்றுக் கொண்டார் என்பதை அவரது வாழ்விலும் வாக்கிலும் காணமுடிகிறது.

கவிமணியின் ஆன்ம முதிர்ச்சி (பரிபக்குவ) நிலை :

கவிமணி பிறந்த ஊரான தேரூரையடுத்துள்ள வாணன்திட்டு மடத்தில் தலைவராயிருந்த இலக்கிய, இலக்கணம், சமயத்துறையில் பேரறிவு வாய்க்கப்பெற்ற சாந்தலிங்கத் தம்பிரானிடம் இளமையில் தமிழ்கற்கத் தொடங்கினார். இலக்கிய, இலக்கணங்கள் தேவாரம், திருவாசகம் ஆகியவற்றைப் பத்தாம் வயதிலேயே கற்கும் வாய்ப்பேற்பட்டது. அதனால் கவிதை பாடும் ஆற்றலும் கைவரப்பெற்றார். திருநெல்வேலி மடத்தைச் சார்ந்த உமையொருபாகக் குருக்கள் கோட்டாற்றுக்கு வந்தபோது அவரிடம் கவிமணி சிவதீட்சை பெற்றார். தம் குருவின் மீது பத்தாம்

வயதிலேயே வெண்பா பாடினார்[7]. இளமையிலேயே கடவுள் பற்றிய சிந்தனையும், சமயநூல்களைக் கற்கும் வாய்ப்பும் கவிமணிக்கு அமைந்தன. அடக்கம், அன்பு, அருள், உயிரிரக்கம், கனிவு ஆகிய பண்புகள் இளமையிலிருந்தே கவிமணியின் வாழ்வைச் செம்மையை நோக்கிச் செலுத்தின. அவர் உள்ளம் அருள்வடிவமாக விளங்கியதன் காரணமாகவே கருணைக்கடலான புத்தர் வாழ்வும் வாக்கும் அவரைக் கவர்ந்தன. அதனால் எட்வின் ஆர்னால்ட் எழுதிய "Light of Asia" என்னும் புத்தர் வரலாற்றைக் கவிமணி தம் கவிதையாற்றலால் 'ஆசிய ஜோதி' என்னும் நூலாகப் பாடினார்.

கவிமணியிடம் புலமையின் நிறைவு இருந்தது. உயர்பண்புகள் அவரிடம் நிறைந்திருந்தன. ஆதலின் அவர் தற்பெருமை, பொருட்பற்று, புகழ்ப்பற்று ஆகியவை அணுகமுடியாத செம்மையின் உறைவிடமாகத் திகழ்ந்தார். பற்றினை விட்ட அவரது ஆன்மா துறவும் கனிவும் நிறைந்ததால் முதிர்ச்சி நிலையை அடைந்தது. அதன் விளைவாகவே இறையருட்பாடல்கள் பல அவரது கவிப்புலத்திலிருந்து விளைந்தன. இவ்வுண்மையை,

> "கவிமணியின் கவிதைகள் தமிழர் பண்பாட்டிலும் மரபிலும் பிறந்தவை; உள்ளத்தே அமுதூறித் திப்பவை. சுவைத்துச் சுவைத்துச் சொல்லுந் தோறும் இனிமை கனிந்து சுரப்பவை ...... இக் கவிதைகள் திடீரெனக் காய்ப்பதுமில்லை; திடீரெனக் கனிவதுமில்லை. ஆன்ம பரிபக்குவ காலத்திலேதான் காய்த்து முதிர்ந்து இவை கனிய வல்லவை. கவிமணியை நேரிற்காணும் பேறு பெற்றோர், அவரது ஆன்ம பரிபக்குவநிலையை உணர்வார்கள் அத்தகைய நிலையிலிருந்து தான் 'மலரும் மாலையும்', 'ஆசிய ஜோதி' முதலிய கவிதைத் தொகுதிகள் தோன்றவல்லன என எளிதில் தெரிந்து கொள்வார்கள்"[8]

என்னும் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின் கருத்து புலப்படுத்துகிறது.

கடவுளைப் பற்றிய ஞானம் கைவரப்பெற்று மலங்களிலிருந்து நீங்கும் ஆன்மாக்களுக்குத்தான் இறைவனது அளப்பரிய ஆற்றலும் அருளும் புலப்படும். அந்நிலையில் தனது அறிவின் சிறுமையும் தோன்றும், 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்'[9] என்னும்

வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப அறிவால் தன்னை அறிந்து உணர்ந்த ஆன்ம ஞானியே தலைவனை அறிவான். தலைவன் தாளின் பெருமையையும் தன் சிறுமையையும் உணர்வான். அந்நிலையிலிருந்து தான் கவிமணி,

பல்லவி

"உன்னாலே என்ன ஆகும்? — ஏழை மனிதா
உன்னலே என்ன ஆகும்?

அநுபல்லவி

நன்னாரிற் பூட்டியொரு நாயகன் ஆட்டியல்லால்
தன்னாலே ஆடும் பாவை தரணியில் எங்குமுண்டோ? 10
(உன்னா)

என்னும் பாடலைப் பாடினார். இறைவன் அருளைப் பெறா திருந்தால் ஏழை மனிதனால் என்ன செய்ய முடியும் என்று பாடினார். இது 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் முன்னோர் வாக்கினை உறுதிப்படுத்துகிறது. ஆகவே, கவிமணியின் உள்ளம் உலகியல் நாட்டமின்றி அருளியல் நாட்ட முடையதாக இருந்தமையை அவரது கடவுட் பாடல்கள் காட்டுகின்றன.

பலதெய்வம் போற்றலும் சமயப் பொதுமையும்:

சைவராய்ப் பிறந்து, சைவ சமய இலக்கியங்கள் — தத்துவ உண்மைகளைக் கற்றும் கேட்டும் தெளிந்த கவிமணி பல்வேறு தெய்வங்களையும் பாடினார். பிற சமயவாதிகளைக் காட்டிலும் சைவர்க்குச் சமய சமரசமும் சகிப்புத் தன்மையும் இயல்பாகத் தோன்றுவதில் வியப்பில்லை. சைவத்தில் தோன்றிய திருமூலர் — தாயுமானவர் — இராமலிங்கர் ஆகிய சான்றோர், சமயங்கள் மனித மனத்தை உயர்த்துவதற்குரிய படிகள் என்றும், ஆன்மாவை கனிவிப்பதற்குரிய பயிற்சியைத் தருவதே பக்தி என்றும் கூறினர். சமயவெறி, மதமான பேய் பிடியாதிருக்க வேண்டினர். சமயங் கடந்த சமரச சன்மார்க்க ஞானநிலையை அடையும் வழியைக் காட்டினர். ஆதலின் சைவத்தில் நின்றொழுகும் தெளிவுடையோர் சமய வேற்றுமையில் ஒற்றுமைகாண்பர்; ஆன்ம நேயத்தைக் காண்பர். கவிமணியும் இவ்வாறே இளமையிலேயே தெளிந்த ஞானம் பெற்றவராக விளங்கியமையால் பல்வேறு சமயங்களையும் ஒத்துக் கொண்டார்.

விநாயகன், முருகன், சிவன், உமையம்மை, திருமால், கலைமகள் ஆகிய தெய்வங்கள் மீது கவிமணி கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். இருப்பினும் இவ்வாறான பலபெயர்களும் சொற் பதங்கடந்து நின்ற சோதிப் பெருமானுக்குரியவையே என் றெண்ணினார்.

" ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ? "[11]

என்னும் திருவாசக உண்மையினைக் கவிமணி உணர்ந்தவ ராதலின்,

பல்லவி

" திருநாமம் பாடி வாழ்த்துவோம் ; தினம் தினம்
திருநாமம் பாடி வாழ்த்துவோம் !

அநுபல்லவி

ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம் (திரு) "[12]

என்று கீர்த்தனை பாடினார். கடவுளை எந்தப் பெயரைச் சொல்லியும் அழைக்கலாம். அவன் சமயங்களைக் கடந்து நிற்பவன் என்னும் கருத்து கவிமணியின் பாடல்களில் அழுத்த முடன் வெளிப்படுகின்றது.

பல்லவி

" எப்பெயர் சொல்லி அழைப்பேன் ! — ஏழை எளியேன்
எங்குனைக் கண்டு தொழுவேன் !

அநுபல்லவி

அப்பனும் அம்மையுமாம் அனைத்துலகையும் ஈன்ற
தற்பரமாம்பொருளே ! சமயா தீதப்பொருளே !
... ...
ஈடும் எடுப்பு மிலா ஏக பரம்பொருளே !
... ...
யாவுமாய் அவ்லவுமாய் இருந்த பரம்பொருளே !"[13]

என்னும் பாடல் மேற்கூறிய கருத்தினை வலியுறுத்துகிறது.

சமயக் காழ்ப்பும் வெறியுணர்வும் உள்ளத்தில் தோன்றுமானால் பிறசமயங்களை மதித்து ஏற்றுக் கொள்ளும் மனம் அமையாது. சைவ சமயத்தவரும் புத்தம், சமணம் ஆகியவற்றைப் புறச் சமயங்கள் என்று வெறுத்து ஒதுக்கிய நிலையைத் தமிழக வரலாற்றில் காண முடியும். இன்றும் சமயப்பூசல்களால் மனித்

குலம் போரில் சிக்கித் தவிப்பதைக் காண முடிகிறது இக் காரணத்தால் கவிமணி சமயங்கள் வேண்டாம் என்று வெறுக்க வில்லை. அனைத்துச் சமயங்களிலும் உள்ள உண்மைகளை, பொதுமையுணர்வினை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதே அவரது நோக்கம். சமய ஒருமைப்பாட்டினை அவர் வலியுறுத் தினார். கவிமணியின் இப்பரந்த உள்ளமே புறச்சமயத்தலைவ ராகிய புத்தர் வரலாற்றை ஆசிய ஜோதியாகப் பாடக் காரணமாக அமைந்தது எனக் கருத முடிகிறது. ஆகவே கவிமணியின் கவிதைகள் மனிதகுலம் கடைப்பிடித்து வாழவேண்டிய பொதுமை நாட்டத்தினை வலியுறுத்துவன என்பது உண்மையாகும்.

கவிமணி கண்ட கடவுளியல்பு :

பண்டைத் தமிழ்ச்சான்றோர் இறைவனை இயற்கைப் பொருள்களிலெல்லாம் கண்டனர் இவ்வாறு காண்பதற்குத் தெளிந்த ஞானம் வேண்டும். பேருலகப் (பிரபஞ்சம்) பொருள்க ளெல்லாம் அவன் வடிவம் எனக் கண்டு ஒன்றாகும் நிலை (அத்துவிதம்) யடைந்த சான்றோரே காணும் பொருளெல்லாம் கடவுளின் வடிவம் என்பர். பழைய இலக்கியங்களில் இவ்வுண்மையைக் காணலாம். இந்நூற்றாண்டில் பாரதியும்,

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா — நின்றன்
கரியநிறந் தோன்றுதையே, நந்தலாலா !
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா ! — நின்றன்
பச்சை நிறந் தோன்றுதையே நந்தலாலா !" 14

எனப் பாடியுள்ளார். கவிமணியோ சிவபெருமானுக்கு விருப்பமுடைய கொன்றை மலரைக் காணும்போது, மின்னும் செஞ்சடையண்ணலாகிய அப்பெருமானையே கண்டதாகவும், வண்டுகள் அம்மலர்களில் மகிழ்ந்து முரன்று சுழன்றுவரும் காட்சி, சிவத்தொண்டர்கள் திருமறை ஓதி வலம் செய்யும் தோற்றத்தைத் தருவதாகவும் பாடியுள்ளார். இவ்வாறு,

"மன்னும் இயற்கையில் ஈசனைக் கண்டு
வணங்கும் மதியுடையோர் — கண்டு
வணங்கும் மதியுடையோர்
பொன்னம்பலம் வெள்ளியம்பலம் தேடிப்
புவியில் அலைகுவரோ? — தேடிப்
புவியில் அலைகுவரோ? "15

என வினவுகின்றார்,

இறைவன் தலையாய தேவாதி தேவர்க்கு என்றும் சேயவன்; ஆனால் அன்பர்தம் வாக்காவும், சிந்தனையாகவும் உள்ளவன் திருநாவுக்கரசர் அருளிய "வாயானை மனத்தானை"[16] எனத் தொடங்கும் திருத்தாண்டகம் காட்டும். கவிமணியும் அவனைத் தேடித் திரிய வேண்டியதில்லை; அவன் அம்மையும் அப்பனுமாய் நம் அருகிருந்து அருள் செய்வான்[17] எனப் பாடினார். இறைவனுடைய காட்சியழகு அடியார்கள் ஆர்வத்துடன் கண்டு மகிழும் இயல்பினது.

> "கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சியான்காண்
> காளத்தியானவனென் கண்ணு ளானே"[18]

என்பது திருநாவுக்கரசர் வாக்கு. அகத்துள் அன்பு நிறையப் பெற்று, வேறு பொருளைக் காணாது, இறைவன் திருக்காட்சியை முழுமையாகக் காண்பவர்காட்சியின் நிறைவையடைவர் என்பது மேற்பாடலின் கருத்து கவிமணி,

பல்லவி

> இருகண் போதுமோடி ! — தோழி
> இருகண் போதுமோடி !

அநுபல்லவி

> முருகன் பவனி வருமக் காட்சி
> முழுதும் கண்டு தொழுது நிற்க (இருகண்)
> ... ...
> ஆயிரம் கண்களால் நோக்கினும் அன்பருக்
> காசை தீராதெனில் அம்ம நமக்கிந்த (இருகண்)[19]

எனப்பாடினார். ஆயிரம் கண்களாலும் காண முடியாத அழகன் முருகன் என்று அவனது காட்சிச் சிறப்பையுணர்த்தினார்.

இறைவனையடைய நாம் தேடியலைந்திடவேண்டியதில்லை. நாம் அன்பினைச் செலுத்தி அவனை நினைதலாகிய பத்தி வழியில் நின்று உள்ளத்தைக் கனியச் செய்தால் போதும்; ஆன்ம முதிர்ச்சி நிலையில் அவன் நம்மை நாடி வந்து அருள் செய்வான் என்பது திருவாசகம் போன்ற அருள்நூல்களின் முடிவு 'பத்தி வலையில் படுவோனாகிய' பெருமான், தமக்கு அருள் செய்த திறத்தை,

> "வானே நிலனே பிறவே அறிவரியான்
> தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்"[20]

என்றும்,

"தான் வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு"[21] என்றும் மாணிக்கவாசகர் அருளினார். திருமுறைகளில் தோய்ந்த கவிமணி நால்வர்க்கு இறைவன் அருளிய திறத்தினை ஒரு கீர்த்தனையில் பாடினார். நம்மைநாடி வந்தருளும் எளிவந்த பிரானைத் தேடியடைய வழிதெரியவில்லையென்று,

"வாடிநீ வருந்துவ தேன்? — மனமே
வாடிநீ வருந்துவ தேன்?"[22]

எனப் பாடியவர், அப்பெருமானைப் பாடிப் பணிந்தால், அவனைத் தஞ்சமெனத் தாழ்ந்து பணிந்தால் ஈ, எறும்பு முதலான எண்ணில்லா உயிர்களைக் காப்பவன் நம்மையும் காப்பான் என்று அவனருளையடையும் வழியையும் கூறினார். தருணம் வரும் போது தடுத்தாட்கொள்ளும் ஈசன் அடிபணிந்திடில் அவன் நம்மை எடுத்தாளுவான்[23] என்று இறைவனது அருளியல்பை உணர்த்தினார். இவ்வாறு கடவுளியல்பைப் பல்வேறு பாடல்களில் கவிமணி விளக்கியுள்ளார்.

கவிமணியின் ஆன்மவிடுதலை வேட்கை

கவிமணி கடவுளியல்பையும் அவன் கருணைத் திறத்தையும் கூறி அவனருளையடைய — ஆன்ம ஈடேற்றத்தையடைய உரிய வழி பத்தி நெறியே என்று பல இடங்களில் வலியுறுத்தியுள்ளார். மெய்ஞ்ஞானிகள் இறைவன் அருளையடையும் வேட்கையுடன் பாடிய பாடல்கள் அவர்களது ஆன்மதாகத்தினை வெளிப்படுத்து கின்றன. கவிமணி,

"கண்டு தொழ வேண்டும்! — தில்லையில்
கண்டு தொழ வேண்டும்!
... ...
பத்தி பெருகிடவே — கொடிய
பாவம் கருகிடவே[24]

இறைவனை வணங்கவேண்டும் என்று பாடியவர், அவனை வழிபடுவதால் பொருளும் பொன்னும் போகமும் விரும்பாதவராக[25], அவன் பாதத்தைப் போற்றிப் புகழும் வாய்ப்பிருக்குமாயின் அதற்காக ஆயுளும் கோடிவேண்டும் என்று பாடியது கருதத்தக்கது. பிறவித்தளையறுத்து ஆன்ம ஈடேற்றம் பெற விரும்பிடும் அடியார்கள், இறைவன் அருட்காட்சியைக் கண்டு வணங்கும் பேறு பெற்றால், மீண்டும் பிறவியை விரும்பினர்.

"குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே"[16]

என்னும் திருநாவுக்கரசர் பாடல் சிந்திக்கத்தக்கது.

இறைக்காட்சியைக் காணவும், அவனருளைப் பெறவும் விரும்பிய கவிமணி இறையன்பில் இன்பநிலை பெற்றுப் (பக்திப் பரவசம்) பல பாடல்களைப் பாடியுள்ளார்.

பல்லவி

"திருவடி தொழுது நின்றேன் — ஜன்மமீடேறச்
செயலெதும் வேறறியேன்

அநுபல்லவி

குருவடிவாகி வந்து குருந்தமரத்தடியில்
அரிய நல்லுபதேசம் அடியர்க் களித்த ஈசா (திருவடி)"[17]

இவ்வாறு இறைவனைப் பாடும்போது இன்பப் பெருக்குடன் அவனது பல்வேறு திருநாமங்களையும் அருளிச் செயல்களையும் போற்றிப் பாடியுள்ளார்[18]

பத்திநெறியில் நிற்கும் சான்றோர் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் பாவித்துப் பாடுவது மரபு. இதனை நாயக நாயகி பாவம் என வடமொழியில் கூறுவர். உயிர்களுக்குத் தலைவனாகிய இறைவனை, (பதியை) பாசங்களிலிருந்து விடுபட்டு உயிர் அடைவதே ஆன்ம ஈடேற்றம் அல்லது வீடுபேறு எனப்படும். அவ்வாறு இறைவனுடன் கலக்கும் நிலையைப் பேரின்பமாகக் காணும் அடியார்கள், இவ்வுலகத்தில் உயிர்களை காணும் சிற்றின்பத்தைக் காட்டிப் பேரின்பத்திற்கு அழைத்துச் செல்லும் நெறியே நாயக நாயகி பாவத்தில் அவர்கள் பாடியருளிய பாடல்களாகும். இத்தகைய பாடல்கள் திருமுறைகளில், திவ்யப்பிரபந்தத்தில் நிறையவுள்ளன. கவிமணியும்

"தேடித் தவிக்குதடி — என் உள்ளம்
தேடித் தவிக்குதடி!"[29]

"இன்னம் வந்தாரில்லையே — அறியாரோ
ஏழ்மைப்படுந் தொல்லையே!

... ...

செந்தமிழ்ப் பண்ணிலே சிக்கிக் கிடக்கின்றாரோ ?
வந்தியின் பிட்டுக்கு வழக்காடி நிற்கின்றாரோ ?
சுந்தரன் வேண்டிடத் தூது நடக்கின்றாரோ ?
எந்தத் திசையேகி என்ன செய்கின்றாரோ ? [30]

எனப் பாடியுள்ளார் இதில் இறைவன் தமிழ்ப்பண்ணில் கட்டுண்டவன் என்றும் அன்புப்பிடியுள் அகப்படுவன் என்றும் கூறும் உண்மைகள் அறியத்தக்கவை. தலைவன் பிரிவால் வருந்தும் உணர்வில்,

" அன்னம் பயில்தில்லைப் பொன்னம்பலத்தாரென்
தன்னந் தனிநிலை சற்றும் அறியாரோ ? " [31]

எனப் பாடியுள்ளார். இறைவன் தரும் இன்பத்தினை எண்ணி அதில் ஒன்றியிருந்து பாடிய,

பல்லவி

" ஊதுவ தாரடியோ? — ப்ருந்தாவனத்
தூதுவ தாரடியோ ?

அநுபல்லவி

காதிலும் என்றன் கருத்திலு மானந்தம்
கங்கு கரையின்றிப் பொங்கிடவே குழல் (ஊது)

சரணம்

அன்னமும் தேவையில்லை — பிறிதொன்றில்
ஆசையும் செல்வதில்லை ;
என்னையும் என்னுளத் தன்னையு மேயித்த
இன்னிசை பற்றி இழுக்குதடி தோழி ! (ஊது) " [32]

என்னும் பாடல், படிப்பார்க்கும் இன்பத்தையூட்டுவதாக அமைந்துள்ளது.

இறையனுபவத்தில் அழுந்தியவர்கள் அச்சமின்றியிருப்பார்கள். பல்லவனை எதிர்த்து, " நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் " [33] என்று முழக்கமிட்ட திருநாவுக்கரசர் தம் பாடல்களில் பலவிடங்களில் தமக்கு அச்சமில்லையென்பதைப் புலப்படுத்தினார் [34]. அருளாளர்கள் முடிமன்னர்க்கோ, காலனுக்கோ அஞ்சுவதில்லை. இறைவன் அருள் துணையிருக்கும் போது காலனுக்கும் அஞ்சவேண்டுவதில்லையென்பர். பாரதியும் ' அச்சமில்லை ' என்று பாடியதுடன்,

"காலா என்றன் கா லருகே வாடா — உனைச்
சிறிபுல்லென மதிக்கிறேன்" 35

எனப்பாடினார். கவிமணி,

"அஞ்சா திருப்பாயென் மனமே! — எமனையும்
அஞ்சாதிருப்பாயென் மனமே! 36

எனப்பாடி, அவனது ஐந்தெழுத்தினை நினைந்து, அருந்தமிழ் மறை ஓதினால், திருக்கயிலைத் தேவாதி தேவனருள் சேரும்; பேரானந்தம் பெருகும்; பிறவிப் பிணியகலும் என்று வலியுறுத்தினார். இவ்வாறு கவிமணியின் பல பாடல்கள் அவரது ஆன்ம விடுதலை வேட்கையினை யுணர்த்துகின்றன.

முடிவுரை :

இதுகாறும் கண்டவற்றால், கடவுட் கொள்கையின் விளக்கம், கவிமணியின் ஆன்ம முதிர்ச்சி நிலை, பல்வேறு தெய்வங்களை அவர் பாடினும் சமயப் பொதுமையுணர்வுடன் விளங்கியமை, அவர் கண்ட கடவுளியல்பு, அவரது ஆன்ம விடுதலை வேட்கை ஆகியவற்றை உணர முடியும். கவிமணியின் கடவுட் கொள்கை தனித்தவொன்றன்று என்பதும், அவர் முன்னோர்தம் அருட்பாடல்கள், அருளனுபவம், வரலாறு ஆகியவற்றைக் கற்றுத் தெளிந்து, அருள்நெறியில் ஒழுகியமையால் முன்னோர் காட்டிய கடவுட் கொள்கையே கவிமணியின் கடவுட்கொள்கையாகவும் இருந்தது என்பதும் அறிய முடிகிறது. ஆகவே கவிமணியின் கடவுட் பாடல்களை விளக்கும் இடங்களில் முன்னோர் பாடல்களை ஒப்பிட்டுக் காணும் வகையில் இக்கட்டுரை அமைந்தது குறிப்பிடத்தக்கது.

குறிப்புக்கள்

1. எம்.ஆர். அடைக்கலசாமி, தமிழ் இலக்கிய வரலாறு, ப. 256.
2. க. வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு முதல் தொகுதி, ப. 33.
3. திருநாவுக்கரசர் தேவாரம், 5-ஆம் திருமுறை, பா. 238.
4. மறைமலையடிகள், தமிழர் மதம் பக். 91-93.
5. திருநாவுக்கரசர் தேவாரம், 4-ஆம் திருமுறை, பா- 398.
6. கி. லக்ஷ்மணன், இந்திய தத்துவ ஞானம், பக். 22-28.

7. செ. சதாசிவம், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, பக். 8-9.

8. பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை, தே. வி. யின் கீர்த்தனங்கள் முன்னுரை, ப. 7.

9. திருக்குறள், 1110.

10. கவிமணி, தே. வி. யின் கீர்த்தனங்கள், ப. 42.

11. திருவாசகம், திருத்தெள்ளேணம், ப. 1.

12. தே. வி. யின் கீர்த்தனங்கள், ப. 64.

13. மு. நூ., பக். 15-16.

14 பாரதியார் - தோத்திரப்பாடல்கள், பா. 48.

15. தே. வி. யின் கீர்த்தனங்கள், ப. 17.

16. திருநாவுக்கரசர் தேவாரம் - 6-ஆம் திருமுறை, பா. 197.

17. தே. வி. யின் கீர்த்தனங்கள், பக். 15-16.

18. திருநாவுக்கரசர் தேவாரம் - 6-ஆம் திருமுறை, பக். 86.

19. தே. வி. யின் கீர்த்தனங்கள், ப. 27.

20. திருவாசகம் - பா. 160.

21. மு. நூ., பா. 178.

22. தே. வி. யின் கீர்த்தனங்கள், ப. 48.

23. தே. வி. யின் கீர்த்தனங்கள், ப. 49.

24. மு. நூ. ப. 62.

25. பரிபாடல் — 5.

26. திருநாவுக்கரசர் தேவாரம் 4 - ஆம் திருமுறை, பா. 783.

27. தே. வி. யின் கீர்த்தனங்கள், ப. 57.

28. மு. நூ., ப. 60, 64.

29. மு. நூ., ப. 32.

30. மு. நூ., ப. 34.

31. மு. நூ., ப. 35.

32. மு. நூ., ப. 67.

33. திருநாவுக்கரசர் தேவாரம், 6 - ஆம் திருமுறை, பா. 96.

34. மு நூ., 4-ஆம் திருமுறை பா. 11; 921; 1057. 5-ஆம் திருமுறை பா. 603.

35. பாரதியார் — வேதாந்தப் பாடல்கள், பா. 7.

36. தே வி. யின் கீர்த்தனங்கள், ப. 50.

துணை செய்த நூல்கள்

1. திருக்குறள்
2. பரிபாடல்
3. திருநாவுக்கரசர் தேவாரம்
4. திருவாசகம்
5. பாரதியார் கவிதைகள்
6. கவிமணி. தே. வி. யின் கீர்த்தனங்கள், பாரிநிலையம், சென்னை, 1977.
7. அடைக்கலசாமி, எம். ஆர்., தமிழ் இலக்கிய வரலாறு, பால் நிலா பதிப்பகம், சென்னை, 1969.
8. சதாசிவம், செ. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர்கோவில் 1, 1977.
9. மறைமலையடிகள், தமிழர் மதம், கழகம், 1965.
10. லக்ஷ்மணன், கி. இந்திய தத்துவஞானம், பழனியப்பா பிரதர்ஸ், 1980.
11. வெள்ளைவாரணனார், க. பன்னிரு திருமுறை வரலாறு அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1972.

பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி, பட்டப்படிப்புப் பாட நூல் வெளியீடுகள் — திறனாய்வு.

திரு. அ. கி. மூர்த்தி, எம். ஏ. பி. டி.,

அறிமுகம் :

1930 க்குப் பின்னர்த் தமிழகப் பள்ளிகளில் 6 முதல் 10 வகுப்புகள் வரை மொழியல்லாத பாடங்களைத் தமிழ் வாயிலாகக் கற்குந்திட்டத்தை அரசு தொடங்கியது. 1969 முதல் கல்லூரிகளிலும் 1978 முதல் மேல்நிலைப் பள்ளிகளிலும் இத்திட்டம் மேலும் செயற்படுத்தப் பெற்றது. இதற்கேற்பத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் அனைத்துத் துறைகளுக்கும் பாடநூல்கள் வெளியிட்டு வருகிறது. தொடக்கத்தில் இது கல்லூரிப்பாட நூல்களை வெளியிட்டது. ஆனால், இப்பொழுது முதன்மையாக 1 முதல் 12 வகுப்புகள் வரை பாடநூல்களை வெளியிடும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளது. இதற்குப் பின்னர் 1991 இல் பாரதிதாசன் பல்கலைக்கழகம் இச்சீரிய முயற்சியைப் பட்ட வகுப்புப் பாடநூல்களுக்கு மட்டும் மேற்கொண்டிருப்பது பாராட்டி வரவேற்பதற்குரியதாகும்.

1930 முதல் 1991 வரை 62 ஆண்டுகள் உயர்நிலை - மேல்நிலைப் பள்ளிகளிலும் 1969 முதல் 1991 வரை 28 ஆண்டுகள் கல்லூரிகளிலும் இம்முயற்சி வேரூன்றி வெற்றி பெற்றுள்ளது என்று துணிந்து கூறலாம். இச்சூழ்நிலையில் பாரதிதாசன் பல்கலைக் கழகம் இளநிலைப் பட்டப்படிப்புக்காக அறிவியலுக்கும் கலை இயலுக்கும் முதன்மை நிலையில் பல பாடநூல்களை வெளியிட்டுள்ளது. அவற்றில் எட்டுப் பாடநூல்கள் தமிழ்ப் பொழிலின் பார்வைக்கு வந்துள்ளன. அவை பற்றி நேரிய முறையில் இங்குத் திறனாய்வு செய்வது நலம் பயக்கும்.

அணிந்துரை :

உயர்நிலைக் கல்வியைத் தமிழில்தான் கற்பிக்கவேண்டும் என்னுங்கொள்கைத் துணிவு கொண்டவர் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர். ச. முத்துக்குமரன். அவர்கள் ஒவ்வொரு பாடநூலுக்கும் அறிவார்ந்த அணிந்துரை வழங்கியுள்ளார்கள்.

ஆய்வுக்குரிய நூல்கள் :

துறை	தலைப்பு	ஆசிரியர்கள்
1. விலங்கியல்	முதுகெலும்பற்றவை-I	திருவாளர்கள் முனைவர் திருமதி எஸ். கே. வள்ளி திரு. சி. இராசசேகரன்
2. விலங்கியல்	முதுகெலும்பற்றவை-II	,,
3. விலங்கியல்	தண்டுடைய விலங்குகள்-I	திரு. ந. முத்துக் குமாரசாமி
4. விலங்கியல்	தண்டுடைய விலங்குகள்-II	க. பழநிவேல் ,,
5. இயற்பியல்	பொருட்பண்பியலும் ஒலியியலும்	முனைவர் எஸ். சோமசுந்தரம் வ. மணிவண்ணன்
6. வேதியியல்	கனிம வேதியியல்-I	முனைவர் எஸ். சிதம்பரம் முனைவர் இரா. அறிவுடைநம்பி
7. கலையியல்	கணக்குப் பதிவியல்-I	பி. சுப்பிரமணியன் எஸ். சங்கரன்
8. கலை இயல்	இந்தியப் பொருளாதார வளர்ச்சி-I	கோ. செயராமன் ஆ. பீ. செ. பால்ராஜ்

முதுகெலும்பற்றவை I, II

எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு எழுதப் பெற்றுள்ளன. பின்வரும் குறைகளை அடுத்த பதிப்பில் களைதல் நலம். (1) பெருந்தொகுதி சிறுதொகுதியைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்களுக்கு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல் இன்றியமையாதது.

எடுத்துக்காட்டுகள் : Protozo—முன்தோன்றிகள் Porifera-துளை (புழை) உடலிகள் ; mesozoa—நடுநிலைத் தோன்றிகள், Nemertinea—புழுப்போலிகள்

2) அதேபோலப் பல ஆங்கிலச் சொற்களுக்கு வழக்கிலுள்ள தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துதலும் இன்றியமையாதது.

எடுத்துக்காட்டுகள்

ஆங்கிலம்	*தமிழ்*
Autogamy	தற்கலப்பு
Cell	கண்ணறை
Cytoplasm	கண்ணறைக் கணியம்
Protoplasm	முன் (முதல்) கணியம்
Sponge	கடற்பஞ்சு

3) விளக்கப் படங்களில் தெளிவு மேலுந்தேவை.

தண்டுடைய விலங்குகள் I, II

நடைமுறைத் தமிழில் விளக்கமுற எழுதப் பெற்றுள்ளன. பின்வரும் குறைகள் அடுத்த பதிப்பில் களையப் படுதல் நல்லது.

1) வேற்றுமொழிச் சொற்களுக்குப் பதில் வழக்கிலுள்ள தமிழ்ச்சொற்களையே பயன்படுத்துதல்.

எடுத்துக்காட்டுகள்

வேற்றுமொழி	*தமிழ்மொழி*
திரவம்	நீர்மம்
இரத்தம்	குருதி
சுவாசம்	மூச்சு
மாக்னத்துளை	பெருந்துளை

2) அதே போலப் பல ஆங்கிலச்சொற்களுக்கு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல் நல்லது.

எடுத்துக்காட்டுகள்

ஆங்கிலம்	*தமிழ்*
auricle	மேலறை
hypophysis	கீழ் (அடி) வளரி
ventricle	கீழறை

எலும்பியலில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆங்கிலச்சொற்கள் அனைத்திற்கும் பாடநூல் சொற்கள் உள்ளன.

ஆங்கிலம்	*தமிழ்*
Acetaluliem	குழியம்
Clavicle	காறை எலும்பு

Fibula	முழங்கால் வெளி எலும்பு
Ilium	பின் இடுப்பெலும்பு
Ischium	இடுப்புப் பக்க எலும்பு
Mandible	கீழ்த்தாடை (எலும்பு)
Pubis	பூப்பெலும்பு, இடுப்பு முன் எலும்பு
Scapula	தோள்பட்டை எலும்பு
Tibia	முழங்கால் உள்எலும்பு

பொருட்பண்பியலும் ஒலி இயலும்

பொருள் தெளிவும் கருத்துச் செறிவும் நிரம்ப எழுதப்பெற்றுள்ளன. பின்வரும் குறைகள் அடுத்த பதிப்பில் களையப்பட வேண்டும்.

மாற்றுச் சொற்கள்.

தூண்	— கம்பம் (Coloumn)
வாயு	— வளி (மம்)
வீதம்	— தகவு
சவ்வூடுபரவல்	— ஊடுபரவல்
வேகம்	— விரைவு (நேர்விரைவு, முடுக்கம்)
குணங்கள் (உயர்திணை)	— பண்புகள் (அஃறிணை)
சோதனை	— ஆய்வு
ராக்கெட்	— ஏவுகணை

கனிம வேதியியல் — I

பொருள் விளங்குமாறு எழுதப் பெற்றுள்ளது. பின்வரும் குறைகள் அடுத்த பதிப்பில் நீக்கப்படுதல் வேண்டும்.

மாற்றுச் சொற்கள்

எலெக்ட்ரான் — மின்னணு (கலைக்கதிரில் பயன்படுவது, பலரும் பயன்படுத்துவது).

தத்துவம் — நெறிமுறை

பொதுவாகப் பின்வரும் சொற்களுக்கு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களாவன :

Doctrine	— கோட்பாடு
Hypothesis	— கருதுகோள்
Principle	— நெறிமுறை
Postulate	— எடுகோள்
Theory	— கொள்கை

சேர்மங்களுக்குப் பின்வருமாறு எண்ணிக்கையைக் குறிக்கும் சொற்களைப் பயன்படுத்தலாம்.

monoxide	— ஓராக்சைடு
dioxide	— ஈராக்சைடு
trioxide	— மூவாக்சைடு
tetraoxide	— நான்காக்சைடு

இம்முறை மேல்நிலை வகுப்பு வேதியியல் பாட நூல்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

கணக்குப் பதிவியல் — I

புரியும் நடையில் எழுதப்பெற்றுள்ளது. ரொக்கத்திற்குப் பணம் என்னும் சொல்லையும் சஸ்பென்ஸ் அக்கவுண்ட் என்னும் சொல்லுக்கு ஈரெட்டுக் கணக்கு என்னும் சொல்லையும் பயன் படுத்தலாம்.

இந்தியப் பொருளாதார வளர்ச்சி — I

இந்நூலில் மட்டும் தமிழ்மரபு சிறிது குன்றுகிறது. ஆங்கில வாடை வீசுகிறது.

எடுத்துக்காட்டு

... பயன்படுத்தப்படாத ... எனலாம். பக்—1. நச்சுச் சுழல் தேவைப்பக்கம், நச்சுச் சுழல் அளிப்புப் பக்கம் பக்—15.

மாற்றுச் சொற்கள்

வறுமை நச்சுச்சுழல்	— வறுமைத் தீஞ்சுழல்
நச்சுச் சுழல் தேவைப்பக்கம்	— தீஞ்சுழல் தேவைநிலை
நச்சுச் சுழல் அளவுப்பக்கம்	— தீஞ்சுழல் அளவுநிலை
ஆலோசனை	— கருத்தேற்றம்
விவசாயம்	— வேளாண்மை
சுகாதாரம்	— நலவாழ்வு
ஆரோக்கியம்	— வாழ்வு நலம்
பிரச்சினை	— சிக்கல்
ரிசர்வ் வங்கி	— காப்பு வங்கி
ரயில்வே (ஸ்)	— இரும்பு வழி(த்துறை)
atomic power	— அணு ஆற்றல் (மின்சார ஆற்றல் அன்று)

பொதுக் கருத்தேற்றங்கள்

1) **பல்கலைக்கழக வெளியீடாக** வருவதால் அச்சுப்படி நன்கு பார்க்கப்படவேண்டும். பார்க்கப்பட்டிருந்தால் ஒற்றுப்பிழைகளும் எழுத்துப்பிழைகளும் தவிர்க்கப் பட்டிருக்கும்.

2) தமிழ் மரபுக்கு முரணாகச் சொல்லாட்சியும் வாக்கிய அமைப்பும் உள்ளன. உடற்சுவற்றை — உடற்சுவரை, முதுகெலும் பற்றவை - II பக்—4.

தொடக்க அளவுக்கும் உருவத்திற்கும் திரும்பிவர முயற்சிக்கும் (முயலும்) பொருட் பண்பியலும் ஒலியியலும் பக் — 1

வெளியிலிருந்து செயற்படும் விசை நீக்கப் பட்டவுடன் பொருள்கள் தமது பழைய நிலைக்கு, தொடக்க அளவுக்கும் உருவத்திற்கும் திரும்பிவர முயற்சிக்கும் (பொருள் தெளிவில்லை).

புறவிசை செயல்படாத பொழுது, பொருள்கள் தம் பழைய நிலையை அடையும். அப்பொழுது அவற்றின் அளவும் உருவமும் தொடக்கத்தில் இருந்தது போலவே இருக்கும். (பொருள் தெளிவுள்ளது).

வாய் உணவு முன் குழலுள் திறக்கிறது. முதுகெலும்பற்றவை II பக் — 332.

உணவு முன் குழலில் வாய் திறக்கிறது. எழுவாய் பின் வருதலே தெளிவு தரும்.

பொதுவாகக் கருத்தை வாங்கித் தமிழ்ச் சிந்தனையோடு எழுதினால் தெளிவு தானே ஏற்படும். எலெக்ட்ரான் அமைப்பு என அழைக்கப்படுகிறது. கனிம வேதியியல் — I பக் - 1 எனக் கூறப்பெறுகிறது.

3) பொருள் தெளிவு கருதிச்சொற்களைப் பிரித்து எழுதுவதே நல்லது. பெரு முதலறையுயிரி — பெரு முதலறை உயிரி.

4) விளக்கப் படங்கள் தகுதிவாய்ந்த பாட நூல்களுக்கே உரிய முறையில் உருவாக்கப்பட வேண்டும்.

5) உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப் பள்ளிப் பாட நூல்களிலுள்ள பல தமிழ்ச்சொற்கள் விடப்பட்டு ஆங்கிலச் சொற்கள்

ஒலி பெயர்ப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது தவிர்க்கப் படவேண்டும் என்று பாரதிதாசன் பல்கலைக் கழகம் பாடநூல்கள் எழுதுவோருக்குக் கலைச் சொல்லாக்க நெறிமுறைகளில் அறிவுரை வழங்கியுள்ளமை நினைவில் கொள்ளத் தக்கது; இனிப்பாட நூல்கள் எழுதுவோர் கருத்தில் கொள்ள வேண்டியது. அப்பொழுது தான் கலைச்சொற்கள் நாளாவட்டத்தில் **ஒருநிலைப்படும்.**

6) ஒவ்வொரு பாடநூலிலும் இறுதியில் தரப்பெற்றுள்ள கலைச்சொல் அகரவரிசை முழுமையானது அன்று. சராசரி 300 சொற்கள் அளவே உள்ளது. குறைந்தது 1000 அடிப்படைச் சொற்களுக்கு அகரவரிசை உருவாக்குதல் வருங்காலக் கலைச் சொல் வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் பயன் அளிப்பதாகும்.

7) **பொதுப்பதிப்பாசிரியர்** ஒருவர் ஒவ்வொரு பாடநூலையும் பதிப்பிக்க ஏற்பாடு செய்தால், கலைச்சொற்கள் திரிபு இல்லாமல், **ஒருபோக்கு** நிலையில் இருக்க வழி வகுக்கும். இதைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் கருத்தில் தவறாது கொண்டு செயற்படுத்த வேண்டும்.

8) தமிழில் வெளியாகும் பாடநூல்களுக்குப் **பொருளடக்க அகர**வரிசை (Index) இல்லாதிருப்பது பெருங்குறையாகும். இக் குறையும் அடுத்த பதிப்பில் நீக்கப்பெறவேண்டும்.

9) பாடத்திட்டத்தைப் பொறுத்தவரை, மேல்நிலைப் பாடத் திட்டத்திலுள்ள சில பகுதிகள் ஒவ்வொரு பாடநூலிலும் **இரட்டித்** துள்ளன. இவற்றிற்கு மாற்றாகப் **புதுச்செய்திகளைச்** சேர்த்தால், பாடத்திட்டம் காலத்துக்கேற்றவாறு அமையும்.

கலைச்சொல்லாக்கம்—பருந்துநோக்கு

இதுவரை உருவாகியுள்ள கலைச்சொற்களைப் பருந்து நோக்கில் பார்த்தால் பின்வரும் உண்மைகள் நன்கு புலனாகும்,

1) அறுபது விழுக்காட்டு அளவுக்குச் சொற்கள் வழக்கேறி **ஒருநிலைப்** பெற்றுள்ளன.

2) முப்பது விழுக்காட்டு அளவுக்குச் சொற்கள் முழுதும் ஆங்கிலமாக இருப்பதால், அவை செப்பம் பெற வேண்டியுள்ளன. இவற்றை உடன் **ஒருநிலைப் படுத்துவதே** ஒவ்வொருவரும் **அறிவியல் தமிழ்வளர்ச்சிக்குச்** செய்யவேண்டிய தலையாய கடமையாகும்,

3) பத்து விழுக்காட்டு அளவுக்கு வழக்கேறிய **வேற்று மொழிச்சொற்கள், அலகுச்சொற்கள், குறியீட்டுச் சொற்கள்** முதலியவை அமைகின்றன. இவற்றில் எவ்வகை மாற்றமும் செய்வதற்கில்லை. அவை நிலைபேறு பெற்றவை.

4) கருதத்தக்க அளவுக்கு ஒவ்வொரு துறையிலும் மேற்கோளாகக் கொள்ள நூல்கள் எழுதப் பெற்றுள்ளன. திறனாய்வு செய்யப்பெற்ற மேற்கோள் நூல் பட்டியல்படி தமிழில் வெளிவந்துள்ள நூல்களின் எண்ணிக்கை பின்வருமாறு :

முதுகெலும்பற்றவை — 15. தண்டுடைய விலங்குகள் — 7. பொருட்பண்பியலும் ஒலியியலும் — 3. கனிமவேதியியல் — 2. கணக்குப் பதிவியலுக்கும் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கும் தமிழ்நூல்கள் மேற்கோள் பட்டியலில் இடம்பெறவில்லை.

(அடுத்த இதழில் ஒவ்வொரு பாடநூலிலும் ஒலிபெயர்ப்பாகக் கொடுக்கப்பெற்றுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் வெளியாகும்).

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அமைப்புமையவாதம் : கிடங்கும் தொழிற்சாலையும்

நோயல் ஜோசப் இருதயராஜ்,
ஆங்கிலத்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

Lexicon அல்லது சொற்றொகுதி, சேகரித்துப் பராமரித்து, அங்கீகரித்து வைத்துள்ள 'பேச்சு மரபே மேலும், சமூக அங்கீகாரத்துடன் 'மொழிக் கிடங்கிற்குள் நுழை'யும் சொற்களும் அங்கீகாரமின்மையால் நுழைய முடியாத சொற்களும் எங்கு, மொழி விதிகளால் இன்றி எவற்றால் உற்பத்தி செய்யப்பட்டன? 'Langue' என்பதை ஒருவிதத்தில், அதாவது எண்ணிக்கைக்குட்பட்ட, மாறாத, அறுதியிடக்கூடிய மைய விதிகளின் (Finite set of Core-Rules), (பெயர், வினை, இடை, உரி போன்ற சொல், தொடர் வகைமைகளும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், ஆகுபெயர் முற்றெச்சம், போன்ற செயல்பாட்டுச் சாத்தியங்களும் இவற்றில் தனித்தனியாகவும் ஊடறுத்தும் நிகழும் சேகர விகாரங் களும் உள்ளிட்ட விதிகளின்) தொகுப்பு என்னும் பொருளில், கிடங்காகக் கொள்ள இடமுண்டு. அப்போதும் இக்கிடங்கைச் சொல், தொடர், வகைமைகள், செயல்பாட்டுச் சாத்தியங்களாகிய நுகர்பொருள் சேகரக் கிட்டங்கியாக மட்டுமின்றிக் கச்சாப்பொருள் உருவாகும் சுரங்கமாகவும் விரித்தறிய வேண்டும். பேச்சின் கச்சாப் பொருள்களாகிய மிடற்றதிர்வு / அதிர்விண்மை, வெடித் தொலித்தல், உராய்ந்தொலித்தல், வெடிப்பு—உராய்வுக் கலத்தல், ஔகாரமாதல், திணை, எண், பால், இடம், பருமை / நுண்மை, காலம் முதலியனவற்றை Substantive Universals எனச் சாம்ஸ்கி வருணிக்கிறார். Langue குறித்த இவ்விரு திறப்பட்ட கிடங்குப் பார்வையைச் சமனப்படுத்தும் எதிர்ச்சுமையாக Langue என்பதைக் தொழிற்சாலை அல்லது கருவிப் பெட்டியாகவும் பார்க்க வேண்டும். சுருக்கமாக அமைப்பு மைய வாதத்தையும் அதன் அடிப்படைக் கருத்தாக்கங்களில் ஒன்றான Langue என்பதையும் கிடங்கும் தொழிற்சாலையுமான இயக்க இயல் (Works)பார்வையில் புரிந்து கொண்டால்தான் சாராம்சவாதத்தைத் தவிர்க்கமுடியும். இந்த நுணுக்கங்கள் ஒருபுறம் கிடக்கட்டும். ஓர் எளிய, ஆதாரமான கேள்வி : சரியான ஆங்கில உச்சரிப்பு ஸ்ட்ரக்சுரலிசமா? ஸ்ட்ரக்சரலிசமா ? ஒலிபெயர்ப்பில் கூடியமட்டும் மூலமொழி உச்சரிப்புக் காப்பாற்றப்பட வேண்டாமா ?

6. Particularism எனப்படும் உதிரிக் குறிப்புவாதத்திற்கு எதிரான Universalism எனப்படும் பொதுமை வாதம் எனவும் Ideographism எனப்படும் தூலவிசேட வாதத்திற்கு எதிரான Nomothetism எனப்படும் வரன்முறை / விதிப் பொதுமை வாதம் எனவும் ஸ்ட்ரக்சரலிசத்தை வரையறுக்கலாம். கியாதி இயல் பேராசையும் ஆணவமும் பீடித்த நிலையில் ஸ்ட்ரக்சரலிசம் பலதுறைப் பொதுமைகளைச் சாதிக்கும் சர்வப் பொதுமை வாதமாகப் புடைத்து வீங்கி வெடித்துச் சிதறுகிறது.

7. Empiricism என்பது புலன் அனுபவங்களே அன்றி உளவியல் அனுபவங்களை உள்ளடக்காததாலும் 'அனுபவம்' பிந்தியவற்றிற்கும் விரிவதாலும், Empiricism என்பதை அனுபவவாதம் என்பது சரியல்ல. புலன் அனுபவவாதம் அல்லது பட்டறிவு வாதம் என்பதே சரி.

8 Roland Barthes, "The Structuralist Activity" எனும் கட்டுரையில் "Fragmentation and Articulation" எனப் பகுத்தலையும் ஒருங்கிணைத்தலையும் அமைப்புமைய வாதச் செயல்பாடுகளாகச் சுட்டுகிறார்,

9, அமைப்புமைய வாதத்தை அறிமுகப்படுத்தும் கட்டியங்காரர்களின் ஒளி வேகம் கொண்ட இருண்ட எழுத்துக்களில் 'இருமை எதிர்வு' 'இணை எதிர்வு' எனப் பலவாறு அழைக்கப்படும் வேறு/மாறுபாடுகள் ஒருதலைப்பட்சமான முக்யத்துவம் கொடுக்கப்பட்டு அமைப்பொப்புமைகள் புறக்கணிக்கப்படுகின்றன.

வேதியியலுக்குத் தனிமொழி தேவைதானா ? (Esperanto for Chemists)

பேராசிரியர் வி. அ. இளவழகன்,
தஞ்சாவூர் - 7,

எல்லா பெயர்ச் சொற்களும் "o" விலும் அடைமொழிகள் "a" விலும் எல்லா பன்மைகளும்—"j" விலும் முடிகின்றன. எஸ்பெரான்ட்டோவின் சொற்கள் அய்ரோப்பிய சொற்களை ஒத்தும், இலக்கணம், சீன மொழியை ஒத்தும் இருக்கின்றன. இவை யாவும் வெல்சின் 'எஸ்பெரான்ட்டோ' எனும் [(Wells. J. C. and Hartley, J, 'Esperanto,' London: Hodder and Staughton (New York: David Mecay. co) 1968] புத்தகத்தில் வெளியிடப் பட்டுள்ளன. ஆங்கிலத்திற்கு இணையான எஸ்பெரான்ட்டோ சொற்கள், கீழே தரப்பட்டுள்ளன.

"எஸ்பெரான்ட்டோ மொழியில் வேதியியல்"

ஆங்கிலம்	எஸ்பெரான்ட்டோ
acid	acido
combusion	bruiligo
double bond	duobla ligo
elastic	elasta
phenol	fenolo
gas	gaso
hydrogenate	hidrogenizi
isomer	izomero
cobalt	kobalto
Liquid	likro
Organie	organiko
Pressure	premo
refluc	refluo
Salt	salo
dry	seka
Spectrum	spektro
Sulfide	sulfido
Thermameter	termometro

ஆங்கிலச் சொற்களிலிருந்து எஸ்பெரான்ட்டோவின் வேதியியல் சொற்கள் உச்சரிப்பில் மட்டும் வேறுபடுகின்றன. c, y போன்ற ஆங்கில எழுத்துக்கள் எஸ்ப்பெரான்ட்டோ மொழியில் k, i — ஆக ஒலிக்கப்படுகின்றன.

அறிவியல் எஸ்பெரான்ட்டோ......அப்படி யென்றால்.......

அறிவியலில், எஸ்பெரான்ட்டோ மொழி நுழைந்துவிட்ட போதிலும் பாதை மிகவும் கரடுமுரடாகவே உள்ளது. தற்போது குறைந்த அளவு அறிவியல் இலக்கியங்களே [Ind. Res. Oev. 23.224 (Feb. 1981)] எஸ்பெரான்ட்டோ மொழியில் உள்ளன. மிக எதிர் பார்த்த அளவுக்கு, "ஓகோ", என்று வளரவில்லையாயினும் வேதியியல் அகரமுதலியும், அறிவியல் தொழில்நுட்ப அகரமுதலியும் அறிவியலாரின் ஆய்வுச் சொற்பொழிவுகளும் எஸ்பெரான்ட்டோ மொழியில் (Wester Mayer G. International Chemical Dictionary (English - Esperanto - German) 1982, Tubingen, Federal Republic of Germany Published by the author) வெளியிடப்பெறுகின்றன (Duncan DR. English —] Esperanto Chemical Dictionary 1956, Loudo: British Esperanto Association) எந்திரங்களை, மிருகங்களைக் கட்டுப் படுத்த அவற்றோடு தொடர்பு கொள்வதற்கான அறிவியல் (Cybernetics) மாநாடு, 1980-ல், உலகந்தழுவிய அளவில் பெல் ஜியத்தில் நடைபெற்றது (International Cybernetics) அந்த மாநாட்டுச் செயல்படு மொழியாக எஸ்பெரான்ட்டோ ஏற்றுக்கொள் ளப்பட்டது, என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கரிம வேதியியலில் பெயரிடுவதற்கான மன்றம் (Iupac's commission on the nomenclature of organic chemistry) ஒன்று உள்ளது. அதன் தலைவர் டச்சு நாட்டு வேதியியலார், A.F. ஃகால் மேன் ஆவார். 1951-ல் ஃகால்மேன் கீழ்க்கண்டவாறு குறிப்பிட் டார். இதுவரைக்கும் எல்லா அறிவியலறிஞர்களும் நீண்ட வருடங் களாக இலத்தீன் மொழியைத் தெரிந்து வைத்திருந்தனர். எப்படி யாவது ஒரு நூற்றாண்டுக்குள் ('Chemical Nomenclature' ACS Advances in chemistry Series No. : 8 Washington : American Chemical Society (1953) எஸ்பெரான்ட்டோ மொழியை அறிவிய லார் எல்லோரும் தெரிந்து கொண்டுவிடுவர். வேதியியலில் எஸ் பெரான்ட்டோவின் உடனடிப் பயன்களை அவ்வளவாக எதிர் பார்க்க இயலாது. ஆனால் "எஸ்பெரான்ட்டோவைக்" கற்றுக் கொள்ளவேண்டிய காரணங்களைப் புறக்கணித்துவிட முடியாது,

கடிதப் போக்கு வரத்துக்களில், ''எஸ்பெரான்ட்டோ'' அறிவிய லரால் பெரிதும் கையாளப்படுகிறது. எஸ்பெரான்ட்டோ இதழ்கள், அம்மொழியில் கடிதப் போக்குவரத்து செய்ய விரும்புவோரின் முக வரிகளை வெளியிட்டுள்ளது. அயல் மொழி தெரிந்தவர்கள் எஸ்பெரான்ட்டோவைத் தெரிந்து கொள்ளலாம். 1982-ல் ருசிய மொழி பேசும் வேதியியலார்க்குச் சிறப்பாகத் தனியே ஒரு பயிற்சி நடத்தப்பட்டு 15 பாடங்களும் நடத்தப்பட்டன. (Kolker. B, khim. zhizn, 1982, No : 7, 78—81, No : 8, 80—83, No : 9, 71—74, No : 10, 75—79 (in Russian) 400க்கும் மேற்பட்ட வேதியியலார் அதில் பங்கு பற்றினர். நடந்து முடிந்த தேர்வுகளி லும் (Gancharova, I and Gonchorov. A, khim. zhizn, 1983 (6) 80—1 (in Russian) Moscow : Akademiya Nauk. USSR) நல்ல நிலைகளை (Grades) போட்டியாளர்கள் பெற்றார்கள்.

எஸ்பெரான்ட்டோ மொழியில் வேதியியல் வெளியீடா ?

வேதியியல் தலைப்புக்களில் பல புத்தகங்கள் எஸ்பெ ரான்ட்டோ மொழியில் வெளியிடப்பட்டன. வேதியியல் பொழி வுகள் நிகழ்த்தப்பட்டன. 1984-ல், பொதுமக்களுக்கு வேதி யியலை அறிவுறுத்தும் பொருட்டு எஸ்பெரான்ட்டோ மொழியில் புத்தகம் (Molekuloj' by Janos Nyilasi, Budapest : Science Eldona centro, 1984 in Esperanto) ஒன்று வெளியிடப்பட்டது. பின் வேதியியலைப் பற்றிய நூல் ஒன்றும் எஸ்பெரான்ட்டோவில் வெளிவந்தது, (La Fundamentoj de elektrokemio kai electro-deponado, by Samvel Glasstone, Monroville, USA, Interpart 1968 in Esperanto) ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட புத்தகம், வெயீட்டிற்காகக் காத்திருக்கின்றது. (Generala, organika, kaj biologia kemio by stoker. H. S. and slobaugh. M. Chicago : Esperanto — socito de chicago ; 1988 (in Esperanto).

அகில உலக வேதியியல் (Kemio Internacia) எனும் வேதி யியல் இதழ், எஸ்பெரான்ட்டோ மொழியில் (Kem. Int. Montevides, uruguay, 1965—1968, in Esperanto) சிறிது காலத் திற்கு வெளிவந்தது. வேறு எந்த புதிய மொழியைக் கற்றுக்கொள் வதில் ஏற்படும் இடைஞ்சலில், கால் பங்கு அளவே 'எஸ்பெரான்ட்டோ கற்றுக்கொள்வதில் (Columbia University-Teachers college : Institute of Education Research. Division of Psychology, Esperanto in the modern world compiled by Rudiger Eichholz and viluna Eichholz, Bailieboro, Esperanto

press 1982) ஏற்படுகிறது என அறியப்பட்டுள்ளது. எதிர் வரும் சில வருடங்களுக்கு மட்டுமே, ஆங்கிலம் அகில உலக வேதியியல் மொழியாகத்தக்க (Douglet. A Portman. "Esperanto for Chemists." Chemistry Education, 1988) வைத்துக்கொள்ள முடியும். காலப்போக்கில் ஆங்கிலம் தன்டைய ஆளுமையை இழந்துவிடக் கூடும். உலகமக்கள் தொகையில் ஆங்கிலம் பேசுவோரது தொகை குறைந்து வருகிறது. ஆங்கிலம் பேசு வோர் பெரும்பாலும் வளர்ந்துவிட்ட நாடுகளில்தான் நிறைந்து காணப்படுகிறார்கள். வளர்த்துவிட்ட நாடுகளில் பிறப்பு விகிதமும் குறைவே! பிறப்பு விகிதமே, குறைவாக இருக்கும்போது மக்கள் தொகையும் குறைவுதான். இந்தியா, பிரேசில், கொரியா போன்ற வளர்ந்து வரும் நாடுகள் அதிக அளவில் வேதியியல் ஆய்வுத் தாள்களை வெளியிட்டு வருகின்றன. மக்கள் தொகையையும் பெருக்கி வருகின்றன. அகில உலக அறிவியல் தொடர்புக்காக 'எஸ்பெரான்ட்டோ' எனும் புது மொழியைக் கையாளக் காலம் விரைந்து வருகிறது.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருக்குறள் கூறும் செய்ந்நன்றி அறிதல்— ஓர் ஆய்வு II

ஆ. இரத்தினம்,
1413/வேலு நகர்,
திருவண்ணாமலை-606 602.

புலால் மறுத்தல் :

10.10.3.2 சங்ககால மக்கள் புலால் உண்பதைத் தவறாகக் கருதவில்லை. பரணர் (புறம் 150), கபிலர் (புறம் 14), ஔவையார் (புறம் 235) போன்ற பெரும் புலவர்கள் புலால் உணவை உண்டனர். ஆனால் வள்ளுவர், ''குற்றமற்ற தெளிந்த அறிவினையுடையவர், புலால் உண்ணமாட்டார் (258)'' என்று புலால் உண்ணுதலை இழித்தும் பழித்தும் பேசுவர்.

கள்ளுண்ணாமை :

10.10.3.3 சங்ககால மக்கள் புலால் உண்ணுதலை இழிவாகக் கருதவில்லை. புலவர்களும் உண்டனர். சீற்றத்தால் கூற்றுவனையும், வலியால் பலராமனையும் புகழால் மாயோனையும், எண்ணிய முடித்தலால் முருகனையும் ஒத்திருக்கிறாய், உன்னால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை. அதனால் இரவலர்க்குப் பொருளை ஈந்து, யவனரால் கொண்டுவரப்பட்ட நல்ல மதுவை மகளிர் ஊற்றிக் கொடுக்க நாள்தோறும் உண்டு மகிழ்ச்சியாக ஞாயிற்றைப் போலவும் திங்களைப் போலவும் நிலைபெற்று வாழ்க'' என்று இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனை நக்கீரர் (புறம் 56) வாழ்த்துகிறார். எனவே மது உண்டு மகிழ்தல் துய்த்து மகிழவேண்டியவைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. ''மதுவை உண்ணுபவர் சான்றோரால் மதிக்கப்படமாட்டார் (922) மதுவை உண்ணுதல் நஞ்சு உண்பதாகும் (926) மதுவை உண்ணலாகிய பெருங்குற்றத்தைச் செய்பவனிடமிருந்து நாணம் நீங்கும் (924) என்று சங்கப்புலவர்கள் உண்ட, உண்டுமகிழ வேண்டிய ஒன்று எனக்கருதிய மதுவைக் கடிந்து ஒதுக்குகிறார்.

வேள்வி மறுத்தல் :

10.10.3.4 சங்ககால அரசர்களும் பிறரும் வேள்வி செய்வதைப் பெரும் பேறாகக் கருதினர். பல்யாகசாலை முதுகுடுமிப்

பெருவழுதி, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்று வேள்வி செய்த அரசர்களைப் பெருமையோடு சுட்டினர். சங்க இலக்கியங் களில் வேள்விபற்றிய குறிப்புகள் (புறம் 2, 122, 166. 224, 361, 367, 397) காணப்படுகின்றன. ஆனல் வள்ளுவர் "அவியைச் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதைவிட ஒன்றைக் கொன்று உண்ணாதிருத்தல் நல்லது" என்று வேள்வியைச் சாடுகிறார்.

புரட்சி நூல் :

10,10.3.5 ஆக வழிவழியாய் வந்த பரத்தமை ஒழுக்கம், புல வர்களும் விரும்பியுண்ட புலால் உணவு, புலவரகளே உண்ட, உண்டு மகிழவேண்டிய ஒன்று எனக்கருதிய மது, அரசர்கள் பெருமைக்குச் சான்றாகச் செய்யும் வேள்வி ஆகியவற்றைக் கடிந்த தால், மக்கள் / மக்கள்புலவர்கள் அரசர்கள் ஆகிய அனைவரையும் இடித்துக் கூறிச் சமுதாய மாற்றத்தை எதிர்பார்க்கும் பெரும் புரட்சி நூலாக அமைந்துவிட்டது திருக்குறள்.

ஆதரவுபெறாத நூல் :

10.10.3.6 ஒரு கொள்கையோ, நூலோ விரைந்து போற்றப் பட வேண்டுமானால் அரசின் ஆதரவு பெறவேண்டும். அசோகன் ஆதரவைப் பெற்றதால்தான் பௌத்தம் வெளிநாடுகளிலும் விரைந்து பரவிற்று. வள்ளுவரோ அரசரை அண்டிப்பாடி பரிசில் பெற்று வாழ்க்கை நடத்தியவரல்லர். மேலும் வழிவழியாய்வருகின்ற மது அருந்துதல், வேள்வி செய்தல் ஆகிய மன்னர் செயல்களைக் கண்டித்த வள்ளுவத்தை எத்தனை அரசர்கள் உளமார ஏற்றிருப்பார்கள் ? அடுத்துப் புலவர்கள் ஏற்றுப் பாராட்ட வேண்டும். புலவர்களே விரும்பியுண்ட மது, மாமிசத்தைக் கடிந்த குறளை எல்லாரும் ஏற்றுப்பாராட்டுவார்கள் என்று சொல்லமுடியாது. ஏற்றுக்கொண்டவருள்ளும் எத்தனைபேர் அரசன் ஆதரவு பெறாத நூலை வெளிப்படையாகப் போற்ற முன்வருவர் ? சிலரே. அந்தச் சிலரில் ஒருவர்தான் ஆலத்தூர்கிழார். அவர்கூட திருவள்ளுவர் பெயரை வெளிப்படையாகக் குறிக்கத் தயங்கி ; "அறம்" என்று குறித்தனர்போலும்.

பாடாதது ஏன்?

10. 10. 3, 7. 1. சங்கப் புலவர்கள் சிலர் பலர் குறள் தோன்றுவதற்கு முன் வாழ்ந்தவர்களாக இருப்பர். அவர்கள் குறளைக் குறிக்க முடியாது.

2. சங்கப்புலவர்கள் தமிழரசர்களை, தமிழ் நாட்டை, தமிழைப் புகழ்ந்துபாடுகின்ற போது அவ்வாறு புகழ்ந்து பாடாத திருவள்ளுவரை வெளிப்படையாகப் பாராட்ட வாய்ப் பில்லாமல்போனது.

3. குறள் புரட்சி நூலாகிவிட்டதால் வாய்ப்பு உள்ள ஒரு சில இடங்களிலும் வெளிப்படையாகக் குறளைக் குறிக்க விரும் பாமலும் விட்டிருக்கலாம். இவையே குறளைப்பற்றிய குறிப்பு சங்க இலக்கியங்களில் காணப்படாமைக்குக் காரணங்கள் எனத் தெளிவாகின்றன.

சிலராவது குறளைக்கற்றவர்களே :

10. 11. 1. சங்க இலக்கியங்களில் குறள்கருத்துகள் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. (காண்க : திருவள்ளுவர்— ச. சோமசுந்தர பாரதியார்-1929) இவையனைத்தும் தற்செயலாக நிகழ்ந்தவை (Acccidental Occurence) என்று சொல்லமுடியாது. "காலம் இடையிட்டும், இடம் இடையிட்டும் ஒத்த கருத்துகள் சான்றோரிடையே தோன்றுவது இயல்பு" என்று சிலர் குறள் மொழிகள், கருத்துகள்சங்க இலக்கியங்களில் காணப்படுவதற்குக் காரணமாகக் கூறுவர். காலம் இடையிட்டும், இடம் இடையிட்டும் ஒத்த கருத்துக்கள் சான்றோரிடையே தோன்றலாம். ஆனால் அதே மொழியில் - மொழியமைப்பில் தோன்றும் என்று சொல்ல முடியுமா?

10.11.2 "திருக்குறள் கருத்துகளையும் சொற்றொடர்களையும் தான் புறநானூறு போன்ற சங்கச் செய்யுள்கள் எடுத்தாண்டுள்ளன என்று எவ்வாறு கொள்ளமுடியும்? மாறாக, ஏன், திருவள்ளுவர் சங்கச் செய்யுட்கருத்துக்களையும், சொற்களையும், சொற்றொடர் களையும் எடுத்தாண்டிருத்தல் கூடாது?" 37 என்று கேட்கப் படுகிறது.

10,11.3 திருவள்ளுவரின் திருக்குறளுக்கும் சங்கப்புலவர் களின் பாடல்களுக்கும் பெரும் வேற்றுமையுண்டு, திருவள்ளுவர் தம் காலத்திருந்த அறநூல், தத்துவநூல், பொருள்நூல், சமயநூல், தருக்கநூல், இலக்கண இலக்கியங்கள் முதலியவற்றைக்கற்று மனித வாழ்க்கைக்குரிய அறநெறிகளைத் தொகுத்துத் தம் சிந்தனையி னால் சிலவற்றைத் திருத்தியும், புதுக்கியும் மாற்றியும் அவற்றோடு தம்சிந்தனைத் தெளிவினாலும், பட்டறிவினாலும் உணர்ந்தவற் றைச் சேர்த்துக்குறுகிய பாவில் திட்ப நுட்பமாகச் செறித்து அறம்

பொருள் இன்பம் என்னும் முப்பால்களில் வாழ்க்கைச் சட்டங்களாக வகுத்துரைத்தார். அப்படிப்பட்ட அறநூலைக்கற்றறிந்த புலவர்கள் நுணுகி ஆழ்ந்து கற்பதும் சமுதாயப்புரட்சி நூலானதால் அதன் கருத்துக்களை ஆய்ந்து, ஒத்து உறழ்ந்து வாதம் செய்வதும், இயல்பு. அதனால் வள்ளுவக் கருத்துகளும், மொழிகளும். அவர்கள் மனதில் சிலவேனும் ஆழப்பதிந்திருக்கும். அவை அப்புலவர்கள் பாடலில் அறிந்தோ அறியாமலோ வந்து விழும்.

10.11.4 ஆனால் "தமிழில் எழுந்த சங்கநூல்கள் மக்களது வாழ்க்கை அனுபவங்கள் உணர்ச்சிகள் இதயத்துடிப்புகள் போன்ற நடைமுறை நிலைகளைப் பொருளாகக் கொண்டவை.[38] இத்தகைய சங்கப் பாக்களை குறளை-அறநூலை ஆழ்ந்து கற்று ஆய்வு செய்வதைப்போலக் கற்கவோ, அவற்றின் கருத்துகளையும் மொழிகளையும் மனத்தில் பதித்துக்கொள்ளவோ வேண்டியதில்லை. எனவே வள்ளுவர் சங்கப் பாக்களின் மொழிகளையும், தொடர்களையும் தம் குறட்பாவில் அமைத்துக்கொண்டார் என்பது பொருத்தமாகப் புலப்படவில்லை.

10.11.5 இலக்கிய வரலாறும் இதைத் தெளிவுபடுத்துகிறது. வள்ளுவர்க்குப் பிந்தியவர்களான இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், திருத்தக்கதேவர், கம்பர் முதலிய பெரும்புலவர்கள் சங்க இலக்கியங்களையும் கற்றவர்களே. அவர்கள் காப்பியங்களில் ஆங்காங்கே குறள்கருத்துகளை, தொடர்களை, முழுக்குறளை எடுத்தாண்டுள்ளது வெள்ளிடைமலை. ஆனால் சங்கப் பாக்களிலிருந்து மொழிகளை, தொடர்களை எடுத்தாண்டுள்ளனர் என்பது மிகமிகக் குறைவு என்றே சொல்ல வேண்டும். எனவே எப்படிப் பார்த்தாலும் சங்கப் பாக்களில் காணப்படும் ஒப்புமை மொழிகள் சிலவேனும் குறளிலிருந்து வந்தவையே என்பதும் சங்கப்புலவர்கள் சிலரேனும் குறளைக் கற்றவர்கள் என்பதும் வெளிப்படுகின்றன,

கடைச்சங்க காலத்தில் தோன்றியது :

10.12.1 இங்குக்கவனமாகக் கருதத்தக்கது ஒன்று உண்டு, சங்கப்பாடல்கள் சில பலவற்றில் காணப்படும் கருத்துகள், சொற்றொடர்கள் திருக்குறளிலிருந்து வந்தவை என்பதாலே சங்கப் பாக்கள் அனைத்திற்கும் முன் குறள்யாக்கப்பட்டுவிட்டது என்ற முடிவுக்கும் செல்ல முடியாது. ஏனெனில் சங்கப் பாடல்களில்

காணப்படும் முன் பழந்தமிழ்க்கூறுகள் குறளில் காணப்படவில்லை. குறளில் காணப்படும் பின் பழந்தமிழ்க் கூறுகள் சங்கப்பாக்களில் (புறம் தவிர) காணப்படவில்லை. குறள் எளிமை கருதி எல்லா முன்தமிழ்க் கூறுகளையும் ஒதுக்கியதென்றோ, சங்கப்பாக்கள் எல்லாப் பின்பழந்தமிழ்க் கூறுகளையும் பேச்சுமொழி என்று ஒதுக்கின என்றோ கூறமுடியாது. எனவே சங்கப் பாக்கள் சில பல குறளுக்குமுன் பாடப்பட்டன என்பதை இம்மொழிக் கூறுகள் உறுதிப்படுத்துகின்றன. எனவே குறள் சங்க காலத்தின் இடையில் யாக்கப்பட்டிருக்கவேண்டும் என்னும் முடிவிற்கே வரவேண்டியவர்களாகிறோம். புறத்தில் காணப்படும் பின்பழந்தமிழ்க்கூறுகளும் இம்முடிவையே தருகின்றன என்பதை முன்னரே பார்த்தோம்.

பிற்பட்டதன்று:

10.12.2.1 "சங்க இலக்கியங்களில் புலாலும், வரைவின் மகளிரும் கடியப்படவில்லை. மாறாக அவை வழக்கத்தில் இருந்து வந்துள்ளன. ஆனால் திருக்குறளில் இவ்வழக்குகள் கடியப்பட்டுள்ளன, எனவே திருக்குறள் சங்க இலக்கியங்களுக்கும் பிற்பட்டதாகும்"[39] என்று ஒரு தடை கூறப்படுகிறது.

10.12.2.2 சிந்தனையாளர்கள் காலப்போக்கில் போகிறவர்கள் அல்லர். தம் காலத்தில் காணப்படும் இழிவழிவுகளை எதிர்த்துக் குரல் கொடுப்பவர்களே. நம் நாட்டில் சுதந்திர உணர்வு மக்களிடம் மிக்கிருந்த பொழுதா பாரதி விடுதலை உணர்வுப் பாடலைப் பாடினார்? விடுதலை உணர்வுப் பாடல்களைப் பாடினார் என்றால் என்ன பொருள்? சுதந்தரம் இல்லை, மக்கள் சுதந்தர உணர்வு பெற்று வீறுகொண்டெழுந்து விடுதலை பெறவேண்டும் என்றுதானே பொருள்! (இப்பொழுது யாராவது சுதந்தரப்பாடல்கள் பாடுவாரோ?) பரத்தமை புலாலுண்ணல், மது உண்ணல் முதலியவற்றை அவ்வளவு அழுத்தமாக வள்ளுவர் சாடினார் என்றால் என்ன பொருள்? "சங்ககால மக்கள் வாழ்க்கையில் அவர்கள் வாழ்வை அழிக்கும் இக்களங்கம் (பரத்தமை) புரையோடிப்போனது" என்று அ. ச. ஞா. கூறுவது போல், பரத்தமை முதலியவை கடியப்படாமல் வள்ளுவர்கால சமுதாயம் புரையோடிப் போயிருந்தது என்பதுதானே பொருள்; வள்ளுவர் புரையோடிப் போயிருந்த சமுதாயத்தைச் சாடுதல் அவர் அக்காலத்தில் — சங்ககாலத்தில் வாழ்ந்தார் என்பதைத்தானே காட்டுகிறது. எனவே குறள் சங்ககாலத்திற்குப் பிற்பட்டதன்று.

தொகுப்புரை :

11.0 இப்புகுதியில் இதுகாறும் நோக்கியவற்றால் பின்வரும் கருத்துகள் புலனாகின்றன.

11.1. மொழிக்கூறுகள் அடிப்படையில் பார்த்தாலும் புறப் பாடல் 34 திருக்குறளுக்கு முன் பாடப்பட்டது என்று சொல்ல முடியாது.

11.2. சங்கப்பாடல்களில் குறள்பற்றிய குறிப்பில்லாமைக்குக் காரணம் [அ] சங்கப்புலவர்கள் சிலர் பலர் வள்ளுவருக்கு முற்பட்டவர். [ஆ] தமிழ் நாட்டை, வள்ளல்களை, அரசர்களைப் புகழ்ந்து பாடிய சங்கப்புலவர்கள் அவ்வாறு புகழ்ந்து பாடப் பெரும் பாலும் வாய்ப்பு இல்லை. [இ] திருக்குறள் ஒரு புரட்சி நூலாகி விட்டதால் வெளிப்படையாகப் புகழ்ந்து பாட விரும்பாமலும் விட்டிருக்கலாம்.

11.3. சங்கப் பாடல்களில் காணப்படும் சொற்றொடர், கருத்து ஒப்புமைகள் சிலவேனும் குறளை அடியொற்றியே எழுந்திருக்கவேண்டும். எனினும் மொழிக்கூறுகளை நோக்கும்போது கடைச்சங்ககாலத்தின் இடையில் குறள் தோன்றியிருக்க வேண்டும் என்பது வெளியாகிறது.

11.4. பரத்தமை, மது உண்ணல், புலால் உணவு ஆகிய வற்றைக் குறள் அழுத்தமாகக் கடிதல் அது சங்ககாலத்தில் தோன்றியது என்பதையே காட்டுகிறது.

தொடர்புரை :

12. எனவே புறம் 34 குறளை அடியாகக்கொண்டது என்பதற்குக் காலத்தடையில்லை. எனினும் குறளுக்குப் பின் மேற் கண்ட புறப்பாடல் பாடப்பட்டிருந்தாலும்கூட, அது குறளையும் சுட்டலாம் வேறு நூலையும் சுட்டலாம். எனவே காலம் ஒன்றை வைத்தே அப்புறப்பாடல் சுட்டும் அறம் குறளைச் சுட்டும் என்று சொல்லிவிடமுடியாது. எனவே புறம் சுட்டும் அறம் ஏந்நூலைக் குறிக்கிறது என இனி ஆய்வு செய்வோம்.

சான்றெண் விளக்கம் :

9. வள்ளுவர் வழி, 1986 மாசி பங்குனி.

10. சங்கத்தமிழ் 1, பக்கம் 134

11. மேலது பக்கம் 4
12. புறநானூறு, மறுபதிப்பு 1956 பக்கம் 9.
13. கம்பருக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரா ? பக்.37-38
14. சங்கத் தமிழ் 1, பக்கம் 140.
15. மேலது பக்கம் 139-140.
16. மேலது பக்கம் 228.
17. மேலது ,, 232.
18. மேலது ,, 231.
19. மேலது ,, 234.
20. மேலது ,, 227.
21. திருக்குறள் நடையியல் ,, 123.
22. மேலது ,, 136.
23. சங்கத்தமிழ் 1 ,, 78.
24. மேலது ,, 98.
25. மேலது ,, 102.
26. மேலது ,, 41.
27. மேலது ,, 137.
28. மேலது ,, 214.
29. மேலது ,, 209.
30. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், பக். 144.
31. சங்கத் தமிழ் 1, பக்கம் 123.
32. வள்ளுவர்வழி, 1989 பங்குனி.
33. ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், பக்கம் 143-144.
34. வள்ளுவர் வழி, 1986 சித்திரை.
35. கம்பன்—புதிய பார்வை, பக்கம் 34.
36. மேலது பக்கம் 33-34.
37. திருக்குறளின் காலம், பக்கம் 137-138.
38. வடிவிழந்த வள்ளுவம் ,, 59.
39. திருக்குறளின் காலம் ,, 76.

துணை நூல்கள் :

1. அகத்தியலிங்கம். ச. 1983. சங்கத் தமிழ் 1.

2. அப்பாதுரை. கா. (தமிழில் பெயர்த்தவர்) 1962. '' ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்.

3. ஆனந்தன் கு. ச. 1982 '' வடிவிழந்த வள்ளுவம் ''

4. கனகராசு அ., 1987 '' திருக்குறளின் காலம் ''.

5. சாமிநாதையர் உ. வே. (பதிப்பாசிரியர்), 1956 புறநானூறு

6. சுந்தரமூர்த்தி. இ., 1987 '' திருக்குறள் நடையியல் ''

7. சோமசுந்தர பாரதியார், 1959 ' திருவள்ளுவர் '.

8. ஞானசம்பந்தன் அ. ச., 1984 '' கம்பன் புதிய பார்வை''

9. '' திருக்குறள் உரைக்கொத்து அறத்துப்பால் ''. 1960. திருப்பனந்தாள் வெளியீடு,

10. திருமேனி. கு., 1966 '' கம்பருக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரா ?''

11. மோகனராசு கு., ''வள்ளுவர் வழி'' (மாத இதழ்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தமிழோடிணைந்த வாழ்வுநெறி

முனைவர் இராதா செல்லப்பன்,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

மாநாட்டுத் தலைமை

தமிழ் இலக்கிய மாநாடு :

1941-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் நடந்த தமிழ் இலக்கிய மாநாட்டில் வையாபுரியார் தலைமை தாங்கினார். சங்க காலம் தொட்டு அண்மைக்காலம் வரை தமிழை உயிர்த் தத்துவம் நிரம்பிய மொழியாக்கி அதனை ஊக்கி வந்த புதிய பல சக்திகளையும், மதுரைக்குரிய தமிழ்த் தொடர்பையும், மதுரை நகரின் இலக்கிய வரலாற்றையும் பிள்ளையவர்கள் எடுத்துரைத்தார்கள். (1947 : 175)

புறநானூற்று விழா :

சென்னை தியாகராய நகரில் 1942-இல் வள்ளுவர் குறடு என்ற இலக்கியக் கழகம் ஒன்று தோன்றியது. இக்கழகத்தாரால் 31-10-43-இல் நடத்தப்பெற்ற புறநானூற்று விழாவிற்குப் பிள்ளையவர்கள் தலைமையேற்றார்கள். தமது தலைமையுரையில் புறநானூற்றின் அருமை பெருமைகளை மிகவும் அழகாக எடுத்துரைத்தார்கள்.

சமாஜ ஆண்டுவிழா :

1946-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 41-ஆவது விழாவிலே தலைமை தாங்கிய பேராசிரியர் தமது தலைமையுரையிலே சைவ சித்தாந்த மகா சமாஜம் தோன்றி வளர்ந்த வரலாறு, தமக்கும் சமாஜத்திற்குமுரிய தொடர்புகள், கழகம் ஆற்றிய பணிகள், எதிர்காலத்தில் ஆற்ற வேண்டிய பணிகள் முதலியவை பற்றி விளக்கினார்.

அகில இந்தியக் கீழைநாட்டுக் கலைஞர் மாநாடு (All India Oriental Conference)

அனைத்திந்தியப் பல்கலைக்கழகத்தின் ஆதரவில் அகில இந்திய கீழைநாட்டுக் கலைஞரின் மாநாடு மூன்றாண்டுகளுக்கு

ஒருமுறை நடைபெறும். திருவனந்தபுரம், காசி, ஐதராபாத், நாகபுரி, லஷ்மணபுரி ஆகிய இடங்களில் நடைபெற்ற மாநாடு களில் கலந்துகொண்டு தமிழ்மொழி பற்றிய சொற்பொழிவுகளை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். 1944-இல் காசியில் நடைபெற்ற இம்மாநாட்டில் பங்குபெற்ற பிள்ளையவர்கள் அதன் மொழிப் பிரிவில் Word Study and Chronology in Tamil Literature — என்பது பற்றி ஆராய்ச்சி உரை நிகழ்த்தினார். 1946-இல் நாகபுரியில் இம்மாநாடு நடத்தப்பட்டபோது (19-10-1946) திராவிட மொழிகள், திராவிடரின் நாகரிகம் முதலியவற்றிற்காகப் புதிய துறை ஒன்று தொடங்கப்பெற்றது. இதற்கு முதன் முதலில் தலைமை தாங்கி நடத்திய பெருமை இவருக்குரியது. திராவிடப் பிரிவின் தலைமைப் பொறுப்பேற்று Research in Dravidian Languages என்ற ஆங்கிலப் பேருரையை நிகழ்த்தினார். 1951-இல் இம்மாநாடு லட்சுமணபுரியில் நடைபெற்றது, இங்கும் திராவிடப் பிரிவில் தலைமைப் பொறுப்பேற்று 'திராவிட மொழி யாராய்ச்சி' பற்றித் தொடர்ந்து உரையாற்றினார்.

1952-ஆம் ஆண்டு நடந்த காரைக்குடி கம்பன் கழக ஆண்டு விழாவிலும் தலைமையேற்றார். அவ்விழாவில் கம்பன் ஆராய்ச்சிப் பதிப்பு வெளியிடப் பெற்றது.

பேராசிரியர் இலக்கியக் கூட்டங்களில் கலந்துகொண்டு சொற்பொழிவுகள் பலவும் ஆற்றியுள்ளார். 1912-ஆம் ஆண்டு பாளையங்கோட்டை சைவ சபையில் 'நெடுநெல்வாடையும் நக்கீரரும்' என்ற பொருள் பற்றிப் பேசினார். இது பின்னர் ச. த. சற்குணர் அவர்களின் அறுபதாவது ஆண்டு விழா மலரில் (1937) வெளிவந்தது. இக்கட்டுரை பின்னர் பேராசிரியரின் இலக்கிய தீபம் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. 1922-இல் திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரித் தமிழ்ச் சங்க விழாவிலே 'தமிழின் தற்கால நிலைமை' என்ற தலைப்பிலே சொற்பொழிவு நிகழ்த்தினார். இவ்விழாவிற்கு நீதிபதி கே. ஜி. சேஷையர் தலைமை தாங்கினார்.

ஓய்வுக்குப் பின் :

தமிழாராய்ச்சித்துறைத் தலைவராகப் பத்து ஆண்டுகள் இருந்த பிறகு 10-10-1946 இல் ஓய்வு பெற்றபின் தமது கட்டுரை கதை முதலியவற்றையெல்லாம் நூல் வடிவில் தொகுத்து வெளியிடத் தொடங்கினார். அவை இலக்கியச் சிந்தனைகள், தமிழில் மறு மலர்ச்சி, சிறுகதை மஞ்சரி, தமிழர் பண்பாடு, இலக்கிய உதயம்,

(இரண்டு பகுதிகள்) இலக்கிய தீபம், தமிழ்ச்சுடர் மணிகள் முதலியன. இந்திய வரலாற்றைப் பல்வேறு காலகட்டங்களாகப் பகுத்துப் பல தொகுதிகளாக வெளியிடும் திட்டம் ஒன்று பாரதீய வித்யாபவனால் துவக்கப்பெற்றது. இதற்காக இந்திய வரலாற்றுக் கழகம் (Inblan History Congress) ஒன்று அமைக்கப்பட்டது. இக்கழகம் வரலாற்று நூல்களைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வந்தது. இந்நிலையில் தமிழிலக்கிய வரலாற்றைக் குறித்தகால எல்லைவரை பகுதி பகுதியாக எழுதும் பொறுப்பைப் பேராசிரியர் ஏற்றுக் கொண்டார். இந்த வரிசையில் சங்க இலக்கியம் தொடங்கி கி. பி. 825 வரையுள்ள தமிழ் இலக்கிய வரலசறு பிள்ளை யவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பஐடது. இந்நூலை அவரது மறைவுக்குப் பின்னர் History of Tamil Language and Literature — என்ற பெயரால் என்.சி.பி.எச். வெளியிட்டது. அவ்வாண்டில் நாகபுரியில் நடந்த கீழைக்கலை மாநாட்டில் திராவிடப் பகுதிக்குத் தலைமை தாங்கித் தாம் நிகழ்த்திய ஆங்கில உரையை Research in Dravidian Languages எனத் தனி நூலாக வெளியிட்டார். இந்நூல் திராவிட மொழிகளில் ஆராய்ச்சி எனத் தமிழிலும் பின்னர் வெளிவந்தது. 1949-இல் திருவாங்கூர் பல்கலைக்கழகத்தில் ஜூன் 24 முதல் 29 வரை பல்கலைக்கழகத்தின் அழைப்பிற் கிணங்க, அங்கு சென்று தமிழிலக்கிய சரிதத்தில் காவிய காலம்பற்றி ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இது விரிவான ஓர் இலக்கிய சரிதம். தமிழ்க் காவியங்கள் பலவற்றின் காலம் இலக்கியச் சான்றுகளினாலும் வரலாற்றுச் சான்றுகளினாலும் துணியப்பட்டன. 1950-இல் நல்லாயன் பத்திரிகையில் கிறித்துவ சமயநூல்கள் என்ற தலைப்பில் அரியதோர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதினார்.

திருவிதாங்கூர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் :

திருவனந்தபுரத்திலேயே திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தின் —இன்றைய கேரளப் பல்கலைக்கழகம்— முன்பு பேராசிரியராக இருந்த மு. இராகவையங்கார் 1951-இல் ஓய்வு பெற்றபோது பல்கலைக்கழகத்தார் அப்பதவிக்குப் பிள்ளையவர்களை விரும்பி அழைத்தனர். மூன்று ஆண்டுகள் அப்பதவியிலிருக்க ஒப்புக் கொண்டு அப்பதவியை மேற்கொண்டார். இங்கு பணியாற்றிய காலத்தில் சங்க இலக்கியங்களுக்குச் சொல்லடைவு செய்யும் பணியில் ஆர்வம் காட்டினார். அவரது தலைமையில் பணியாற்றிய டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் (தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்), டாக்டர் ச. வே. சுப்பிரமணியம், காலஞ்சென்ற டாக்டர். மா,. இளையபெருமாள் முதலியோர் புறநானூறு,

குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு முதலிய சங்க நூல்களுக்குச் சொல்லடைவு தயாரித்தனர். அங்கிருந்தபோதும் சென்னையில் தமது நூற்பதிப்பு வேலைகளையும் கவனித்து வந்தார். இலக்கிய மணிமாலை வெளிவந்தது. 1953-இல் திருவனந்தபுரம் தமிழ்ச்சங்கத்தின் தலைமைப் பொறுப்பேற்று, பணிகள் பல புரிந்ததும் குறிப்பிடத்தக்கது. மலையாள மொழியும் பேராசிரியரின் பதிப்பாற்றலைப் பயன்படுத்த விழைந்தது. 1953-இல் மலையாளப் பேரகராதியின் பதிப்புக்குழு உறுப்பினராகவும் அவர் விளங்கினார். 1954-இல் பேராசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்டபோது அவ்வூர்த் தமிழர்கள் பேராசிரியருக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டுவிழா வழங்கியது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர்கள் ஒரு வெள்ளிப் பேழைவில் பிரிவுபசாரப் பத்திரமும் வைத்து அளித்தனர். " இன்று கவி பாடித் தங்களைப் போற்றக் கவிமணி இல்லை. தங்கள் பெருமையை இசையில் மீட்டி இங்கு பாட இசைச் செல்வர் இல்லை. தங்கள் ஆராய்ச்சித் திறனைக் கட்டுரைகளால் சிறப்பிப்பதற்கு இங்கே சிவராஜன் இல்லை. அன்பு கலந்த எங்கள் பன்சொற்களையே பாராட்டுரையாக ஏற்றருள வேண்டும் " என்ற வேண்டுகோளும் இருந்தது.

மீண்டும் சென்னையில் ஓய்வு வாழ்வு :

1954-ல் பேராசிரியர் சென்னை காந்தி நகரிலுள்ள தமது இல்லத்துக்குத் திரும்பினார். 1955-இல் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பிள்ளையவர்களின் இலக்கியச் சேவையைப் பாராட்டி கௌரவித்தது. அதே நாளில் மு. இராகவய்யங்கார் அவர்களும் பாராட்டு பெற்றார். அந்நாளைய ஆளுநர் பிரகாசர் அவர்கள் இருவருக்கும் கேடயம் பரிசு வழங்கினார். பிள்ளையவர்களின் கட்டுரைத் தொகுதியாகிய கம்பன் காவியமும் அதே மகாநாட்டில் அரங்கேற்றப்பட்டது. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கி. வா ஜகந்நாதன், பெ. நா. அப்புஸ்வாமி ஐயர், ம. பொ. சிவஞானகிராமணியார் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். மர்ரே. என். ராஜம் அவர்களின் வேண்டுகோளை ஏற்று ஆழ்வார்கள் பாடல்களாகிய முதலாயிரத்தைப் பாமரர்களும் புரிந்துகொள்ளும் வகையில் அவர் பதிப்பித்து வெளியிட்டார். கம்பராமாயணத்திற்குச் சிறந்த பதிப்பொன்று வெளியிட வேண்டுமென்பது பிள்ளையவர்களின் குறிக்கோள். அதற்காக அவர் பெருமுயற்சி செய்து வந்தார்.

தினமணிகதிரில் இலக்கிய மண்டபம் என்னும் தலைப்பின் கீழ் பிள்ளையவர்கள் தொடர்ச்சியாகப் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். 'பண்டைத் தமிழ்நாடும் சமயமும்', 'பக்தி வெள்ளத்தில் விளைவு' 'அவதாரங்களும் தென்னாட்டுத் தொடர்பும்', 'ராதாவும் கிருஷ்ணனும்' 'சொல்லின் ஒலி வடிவும் வரிவடிவும்', 'கற்றலின் பயன்' முதலிய கட்டுரைகள் இவற்றுள் குறிப்பிடத்தக்கன. பல நூல்களுக்குத் தினமணிச் சுடரில் அவ்வப்போது மதிப்புரைகளும் எழுதி வந்தார்.

பிற பணிகள் :

வையாபுரியார் தமது ஆராய்ச்சிப் பணிகளில் மட்டுமன்றி பிற பணிகளிலும் தமது கவனத்தைச் செலுத்தினார். சென்னைப் பல்கலைக்கழகம் பி. ஓ. எல், பி. ஏ, (ஆனர்ஸ்), எம். ஏ, முதலிய பட்டத் தேர்வுகளுக்கு அவரைத் தேர்வாளராக நியமித்தது. சென்னை அரசின் கல்வித்துறைப் பாடங்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக்குழுவின் தலைவராகவும் பேராசிரியரை நியமித்தது. தொடக்கப்பள்ளி முதல் உயர்நிலைப்பள்ளி வரையில் தமிழ்ப் பாடங்கள், துணைப்பாடங்கள், இலக்கண நூல்கள் முதலியவற்றைத் தேர்வு செய்யும் பணியில் கடமையாற்றிய அவர் பின்னர் இப்பணி தமது ஆராய்ச்சிக்கு இடையூறாக இருப்பதாகக் கருதி அதிலிருந்து தாமே விலகிக் கொண்டார். இவருடைய இத்தகைய தொண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தோடு மற்றும் நின்று விடவில்லை. அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்திலும் பாடத்திட்டக்குழு உறுப்பினராகச் செயலாற்றினார். மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் தேர்வுக்குழு உறுப்பினராகவும் பங்களூர் பல்கலைக் கழகத்துத் தேர்வுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றினார். கல்கத்தா பல்கலைக்கழகத்தின் பொறியியல் நிறுவனமும் இவரைப் பயன்படுத்திக் கொண்டது. நமது அண்டை நாடான இலங்கையிலும் அவர் தம் பணி தொடர்ந்தது. இலங்கையில் (Ceylon Civil Service) அரசுப்பணித் தேர்வின் தமிழ்ப் பிரிவிற்குத் தேர்வாளராக இருந்ததோடு யாழ்ப்பாணம் கீழைநாட்டு மொழித் தேர்வுக் கழகத்திலும் பொறுப்புடைய பல பணிகள் ஏற்றார். தமிழ்நாட்டின் கலைச்சொல் குழு உறுப்பினராகப் (Technical Term Committee) பணிபுரியும் வாய்ப்பும் பெற்றார் 1932-இல் சென்னை அரசாங்கத்தினர் அறிவியல் தமிழ்ச் சொற்களை வெளியிட்டனர் அதில் பல கடின சொற்களும் வடசொற்களும் இருப்பதைக் கண்டித்துச் சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் இக்

குறைகளை நீக்கித் தமிழ்ச் சொற்களைக் கொண்ட கலைச்சொல் தொகுதி ஒன்று தயாரிக்கும் பணியில் ஈடுபட்டது. இத்தொகுதி 1936-இல் வெளிவந்தது. இத்தயாரிப்பில் வையாபுரியாரின் பங்கு இருந்தது குறிப்பிடத்தக்கது. 1941-இல் சென்னைப் பொதுக் கல்வித்துறை இயக்குநர் கலைச்சொற்களைத் தொகுக்கும் நோக்கத்துடன் சீனிவாச சாஸ்திரிகள் தலைமையில் ஒரு குழுவினை அமைத்தனர். வையாபுரியாரும் இக்குழுவில் உறுப்பினராக இருந்தார். ஞாயிற்றுக்கிழமைதோறும் இக்குழுவின் ஆய்வுக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. வையாபுரியார் இக் குழுவில் ஏறத்தாழ 5 ஆண்டு காலம் பணியாற்றினார்கள். இக் கலைச்சொல் தொகுதி 1947-ஆம் ஆண்டில் வெளிவந்தது. இக்கலைச்சொற்களைப் பற்றி கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் திங்களிதழான தமிழ்ப்பொழில் (1946 : 220) "சீனிவாச சாஸ்திரியார் கமிட்டி தயாரித்த கலைச்சொல் பட்டியலில் பாதிக்கு மேல் ஆங்கிலச் சொற்களும் பெரும்பகுதி சமஸ்கிருதச் சொற் களும் சில பகுதி தமிழ்ச் சொற்களுமாக உள்ளன. ஆங்கிலப் பேராசிரியர் சுவாமிநாதய்யர், எஸ் வையாபுரிப்பிள்ளை ஆகியோர் இப்பட்டியலில் காணப்படும் பல தமிழ்ச்சொற்களைத் தயாரித்தனர் என்று தெரியவருகிறது" என்று கூறுகிறது.

மேற்குறிப்பிட்ட கல்வி சார்நிலையங்கள் மட்டுமன்றித் திரைப் பட உலகமும் அவர் உதவியை நாடியது. திரைப்படத் தணிக்கைக் குழுவில் ஒருவராகச் செயலாற்றிய அவர் திருவனந்தபுரத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பு ஏற்பதற்கு அங்கு செல்லும் வரையில் அதாவது மூன்று ஆண்டுகள் (1947 - 50) இக்குழுவில் இருந்தார்.

கல்வியாளர் தகைமை :

வையாபுரிப்பிள்ளை இயற்கையிலேயே நகைச்சுவை படைத்தவர். அவருடைய சிறந்த இயல்பு பிறரை ஊக்குவிப்ப தாகும். இலக்கியம் தந்த இன்பத்தை வேறு பயன் கருதாமல் அனுபவிக்கும் பக்குவம் அவருக்கு இருந்தமையால் திருத்தமான பாடம் கண்ட புகழ் பிறருக்கு வந்தாலும் தாமே புகழ்பெற்றாற் போன்ற மகிழ்ச்சியடையும் உணர்வு அவருக்கு இருந்தது. தம்முடைய தமிழ்ப் புலமையை யாவருக்கும் கொடுத்து உதவும் இனிய பண்பாளராகத் திகழ்ந்தார் பிள்ளையவர்கள். எவரும் எந்த நேரத்திலும் அவரிடம் சென்று தம் ஐயங்களைப் போக்கிக் கொள்ளலாம். அதுபோலப் பலரும் தாம் முயன்று வரும் துறையில் புதிய செய்திகளையும் கருத்துகளையும் அவரிட மிருந்து பெற்றனர். பிள்ளை அத்தகையதோர் இலக்கிய

இலக்கணக் களஞ்சியமாகத் திகழ்ந்தார். ஆராய்ச்சியாளர் பலரும் இவரிடத்தில் சென்று பெரிதும் பயனடைந்தனர். தமது குறை பாடுகளை உணர்ந்து தாமே சுட்டிக்காட்டித் திருத்தும் உயர்ந்த குணம் பேராசிரியர்க்குண்டு. உதாரணமாகப் பேரகராதியில் "கன்னல்" என்ற சொல்லுக்குக் குருவி என்ற பொருள் கொடுக்கப்பட்டிருந்தது. இப்பொருள் தவறானது என்பதைப் பேராசிரியரே ஒப்புக் கொண்டிருக்கிறார். "கன்னலெனும் சிறு குருவி" என்று பாட்டில் வருவதை ஆதாரமாகக் கொண்டு அத்தவறு நிகழ்ந்துவிட்டதாகக் கூறுகிறார். கயாதரர் என்ற சொல்லிற்குச் சொற்கிருப்பிடமானவர்எனச் செந்தமிழ் இதழாசிரியர் பொருள் கொண்டு கை என்பதற்குச் சொல் என வடமொழி வியுத்பத்தி காட்டியதைப் பேராசிரியர் கூறுமிடத்து, இவ்வியுத் பத்தியும் பொருளும் வடமொழி இலக்கணத்தின் படி கொள்ளத் தக்கனவல்ல என்று தம் கருத்தைக் கூறும்போது, இக் கருத்தினைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் வடமொழித்துறை விரிவுரையாளர் டாக்டர் டி. ஆர். சிந்தாமணி அவர்கள் ஆராய்ந்து தெரிவித்ததைக் கயாதரப் பதிப்பு முன்னுரையில் குறிப்பிடுகிறார் (1939:) இதிலிருந்து தமது சொந்தக் கருத்தாக இல்லாதனவற்றைப் பிறர் கருத்து என்று வெளியிடத் தயங்காத அவரது தகைமையை உணரலாம். அதுபோலவே தனக்குத் தெரியாததைத் தெரியவில்லை என ஒப்புக் கொள்வதிலும் அவர் தயக்கம் காட்டுவதில்லை. கயாதர நிகண்டின் பதிப்பில் காயதாரச் செய்யுட்கள் சில (11-ஆம் தொகுதியில்) திருத்தி அமைக்கப்படாமல் இருப்பதைச் சுட்டி, "யான் செய்வதற் குரியது யாதுமில்லை" என்கிறார். தம்மால் முடியாத ஒன்றை இயலவில்லை என்று கூறும் அவரது தலையாய பண்பை இது சுட்டுகிறது. பேராசிரியர் தம்மோடு ஆராய்ச்சிக் கருத்துக்களில் முரண்படுவோரிடம் தனிப்பட்ட முறையில் சினமோ, வெறுப்போ அடைவதில்லை. அவருக்குப் பிற அறிஞர்களோடு முரண்பாடு ஏற்பட்டால் அது ஆய்வுக் கருத்துக்களைப் பொறுத்தே இருக்கும். இதற்குச் சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம். உ. வே. சாமிநாத ஐயருக்கும் வையாபுரியாருக்கும் (6-3-1935-இல்) பல்வேறு கருத்து வேறுபாடு இருந்தாலும்கூட, உ. வே. சாமிநாத ஐயருடைய எண்பதாம் ஆண்டுவிழா சென்னைப் பல்கலைக் கழகத்தில் (1935)-நடைபெற்றபோது அவ்விழா உறுப்பினராகக் கலந்துகொண்டு விழா இனிதே நிறைவுபெற உதவினார் பேராசிரியர். மேலும், "தமிழ்ச்சுடர் மணிகள்" நூலில் ஐயரவர் களைப் பற்றிய சிறப்பான கட்டுரையையும் எழுதியுள்ளார்.

(தொடரும்)

உரை நலம்

இளங்காடு க. சிவசாமி

தமிழ் தொன்மையான இலக்கண, இலக்கிய வளஞ்சார்ந்த அமிழ்தினும் இனிய மொழி. தமிழினம் உலக நாகரிகத்திற்கு வித்திட்ட இனம். 'தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்று நாமக்கல் கவிஞர் பாடியிருப்பதுபோல் தமிழர்க்கென்று தனிப் பண்புண்டு. அப்பண்பின் வழிவந்த தமிழுள்ளம்படைத்த பண்டைப் புலவர்கள் தமிழர்தம் பண்பையும் மரபையும் தாம் எழுதிய நூல்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் எழுதியவற்றுள் மறைந்தன போக எஞ்சிய நூல்கள் சிலவே. அவை தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள் என்பனவும் பிறவுமாம்.

இந்நூல்களெல்லாம் கற்றோரால் எளிதில் உணரப்பட்டு உரை வேண்டா நிலையிருந்த காலப்பகுதி ஒன்றுண்டு. ஆனால், நெடிய காலக் கழிவினாலும், பகையாயினார் சூழ்ச்சித்திறத்தாலும், ஆட்சி மாற்றங்களாலும் தமிழ்மொழி போற்றுவாறின்றித் தன்னிலையில் தாழ்வுற்று நலிவெய்தியது; பிறமொழிகள் தமிழகத்தில் ஏற்றம் பெற்றன. இதனால் பண்டைய இலக்கண, இலக்கிய நூல்களின் பொருளுணர்வார் அருகினர் உரை நூல்களின் தேவை இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று. ஆனால், தமிழர் தம் தவக்குறை உரையெழுதினார் தமிழ்ப் பற்றற்ற வடமொழிப்பற்றாளராய் இருந்தனர் இவ்வுரையாசிரியர்கள் யாவரும் கி.பி.10 ஆம் நூற்றாண்டிற்குப் பின் வந்தவர்களே யாவர். இவர்கள் தாங்கள் எழுதிய உரைகளால் வடமொழிக்கு ஏற்றங்கொடுத்தும், நூற்பொருளைச் சிதைத்தும், பிழை உணர்த்தியும் தமிழுக்குத் தாழ்வே தந்தனர். இக்காலப் புலவோர் சிலர் அவர்தம் உரைகளைத் தலைமேற்கொண்டு உண்மை அறியாராய் ஏற்றியும் போற்றியும் பறையறைந்து மகிழாநிற்கின்றனர். இன்று சிறுகதை, நாவல், கட்டுரை, நாடகம், புதுக்கவிதை என்ற பெயரில் தமிழ் மொழிச் சிதைவு வேலை தொடர்கதையாகத் தொடர்கிறது.

முந்தையோர் போட்ட வலிவான அடிப்படையால் தமிழ் பல நிலநடுக்கங்களையும், கொடும் புயல்களையும் எதிர்கொண்டு இன்றளவும் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையை ஆட்டியசைத்துச் சிதைக்க மொழிச் சீர்திருத்தம்

என்ற பெயரால் ' வாடிப வள்ளி முதலரிந் தற்று ' என்ற குறட் கருத்திற்கு ஒப்ப அழிவு வேலையில் முனைந்து செயற்படு கின்றனர். அவர்தம் அறியாமையை என்னென்று சொல்வது?

தமிழறிஞர் பலர் தம்மால் தமிழுக்கு ஆகும் பயனென்ன என்று எண்ணாதவராய், தமிழால் தமக்கு ஆகும் பயனென்ன என்று எண்ணுபவராய் உள்ளனர். பேரறிஞர் அண்ணா மறைந்த பொழுது கவிஞர் வாலி அவர்கள் ஓர் இரங்கற்பா எழுதினார். அதில்

" நடைதுள்ளுந் தமிழுக்குப் பகைவந்தால் அங்கே
உடைவாளை எடுக்கின்ற பெருவீரன் எங்கே?
இமைமூடிக் கொண்டான் புதைகுழில் மெல்ல
தமிழேஉன் தலையெழுத்து நானென்ன சொல் "

என்று குறிப்பிடுகிறார். இந்த இரங்கதக்க நிலையில்தான் தமிழ் இன்று தாழ்வுற்றுக் கிடக்கிறது.

உலகப் பொதுமறை என அறிஞர்களால் போற்றப்படும் தமிழ் மறையிலிருந்து திருக்குறட்பாக்கள் மூன்றையும் அவற்றிற்கு உரையாசிரியர்கள் சிலர் எழுதிய உரைகளையும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்ப்போம். இல்வாழ்க்கை அதிகாரத்தின் முதல் மூன்று குறட்பாக்களைமட்டும் எடுத்துகொண்டு சிந்திப்போம். உரையாசிரியர்களின் முழு உரைகளையும் எழுதின் கட்டுரை நீளுமென்றஞ்சி எளிதில் விளங்குவன விடுத்து கருத்து மாறு பாட்டிற்குரியன மட்டும் கொண்டு விளக்கி, நேரிய பொருள் யாதெனக் காண்போம்.

' இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. [41]

இக்குறட்பாவில் சுட்டப்படும் மூவர் யாரென்பதை நாம் அறிந்து கொள்ளப் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர் ஆகியோர் குறிப்பன :

1 பிரமசரிய ஒழுக்கத்தான்.

2 இல்லைவிட்டு வனத்தின்கண் தீயொடுசென்று மனை யாள் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக்கத்தான்.

3 முற்றத் துறந்த யோக ஒழுக்கத்தான், என்பனவாகும். இந்த மூவர்க்கும் இல்வாழ்வானோடு என்ன இயல்பு உண்டு?

இல்வாழ்வான் இவர்கட்குத் துணையாதலை யாண்டும் காணு மாறில்லையே? முற்றத்துறந்தவர் அடுத்த குறட்பாவிலல்லவா குறிக்கப்படுகிறார். வனத்தின்கண் மனையாள் வழிபடத் தவஞ் செய்வார் யாண்டுளர்? இல்வாழ்வார் யாங்ஙனம் அவர்க்குத் துணை செய்கிறார்? மூவர்க்கும் என்ற சொல்லுக்கு உரை யாசிரியர்கள் கூறுவன ஏற்புடையனவன்று. இயல்புடைய மூவராவார் வருமாறு:

1) பெற்றோர் 2) மனையாள் 3) இல்வாழ்வான் பெற்ற மக்கள் இம்மூவரே இல்வாழ்வானின் துணையைப் பெறத்தக்க இயல்புடையவராவர். நாம் இன்றைக்கும் காணும் உண்மை நிலையும் இதுவேயன்றோ? (இயல்புடைய 47 ஆம் குறள் பார்க்க)

இம்மூவரும் ஒழுகா நின்ற நன்னெறிகளாவன:

I "காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" [தொல்: கற்பியல்]

அகவையால் முதிர்ச்சியும், தளர்ச்சியும், உற்ற பெற்றோர் சிற்றின்பத்தின்கண் நின்றொழுகுதலைத் துறந்து, சிறந்தன செய்து இல்லத்துறவினை மேற்கொண்டு ஒழுகும் நன்னெறி. தன்னைப் பெற்றுவளர்த்து ஆளாக்கிய பெற்றோருக்கு அவர் ஒழுகா நிற்கும் நெறிக்கண் அவர் பெற்ற மகன் நிலையான துணையாக இருத்தல் கடமையல்லவா?

II வாழ்க்கைத் துணைவி இல்லறமாகிய நன்னெறியின்கண் நிற்பவள். அவள் தன் இல்லற நெறி நின்றொழுக (இல்வாழ்வில் அவள் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி 'வாழ்க்கைத்துணை நலம்' அதிகாரம் விரித்துக் கூறும்) இல்வாழ்வான் நிலைபெற்ற துணையாதல் அவன் கடமையல்லவா?

III பெற்ற மக்கள் மேற்கொள்ளும் நெறி கற்கும் நன்னெறி. அவையத்து முந்தியிருக்க, சான்றோனாக, இல்லறம் ஏற்கத் தகுதிபெறக் கற்கவேண்டும். மாணவப் பருவமே இதற்கு ஏற்ற பருவம். எனவே அவர்கள் அந்நெறிக்கண் நின்றொழுகுங்கால் பெற்றவர் துணையாயிருத்தல் கடமையல்லவா?

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்." [திருக்குறள்]
"சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே" [புறம்]

இல்வாழ்வான் மேற்குறித்த இயல்புடைய மூவர்க்கும் அவரவர் ஒழுகும் நன்னெறிக்கண் நிலைபெற்ற துணையாக வேண்டுவது அவன் கடமையாம். இதுவே அக்குறட்பாவிற்கு உரிய பொருளாகும்.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை [42]

இந்தக் குறட்பாவில் உள்ள துறந்தார் என்பதற்குக் களைகணானவரால் துறக்கப்பட்டவர் எனப் பரிமேலழகரும். வருணத்தினையும் நாமத்தினையும் துறந்தவர் என மணக்குடவரும், மண், பொன், பெண் ஆசையைத் துறந்தார் எனப் பரிதியாரும், ஒருதியம் அற்றதால் உடன் துறந்தார் எனக் காலிங்கரும் பொருள் கூறுகின்றனர். பரிமேலழகர் தவிர ஏனைய உரையாசிரியர்கள் மூவருமே துறந்தார் என்றே குறிப்பிடுகிறார்கள். அடுத்து வருகின்ற துவ்வாதவர் என்ற சொல்லுக்கு வறியவர் என்ற பொருள் காண்கின்றனர் உரையாசிரியர் நால்வரும். அதேபோன்று நால்வருமே இறந்தார் என்பதற்குத் தன்னிடம் வந்து செத்தவர் என்றே உரை எழுதியிருக்கின்றார்கள். செத்தவருக்கு இல்வாழ்வான் துணையாவது நீர்க்கடன் செய்தல் எனப் பரிமேலழகரும், புறங்காட்டுய்த்தல் என மணக்குடவரும் குறிப்பிடுகின்றனர்.

இந்தப் பாடலில் வரும் மூவரும் முதற்பாவில் கூறப்பட்டுள்ள மூவரினும், அடுத்து வரும் பாவிலுள்ள ஐவரினும் பிரித்துக் காட்டப் பெறுவதற்குக் காரணமே செல்வமாகும். தமக்குச் செல்வமிருந்தும் அதன்மீது கொண்ட பற்றினை விட்டுத்துறந்தவர் முதலாமவர். முன்வினைப் பயனால் செல்வத்தைப் பெற்றிராத வறியவர் இரண்டாமவர். மூன்றாமவர் இறந்தார். (செத்தவரில்லை) இவர் செல்வம் உடையராயிருந்தும் விரும்பத்தகாத தீச்செயல் புரிந்து அதனால் செல்வதைத் துய்க்கும் பயன் இழந்து, களைகணானவரால் துறக்கப்பட்டு இன்னலுறுவார். (159, 310 எண் குறட்பாக்களில் 'இறந்தார்' என்ற சொல்லுக்கு எழுதப்பட்டுள்ள உரையைக் காண்க) எனவே, துறந்தவர், வறியவர், அறங்கடந்த செயலால் வாழ்விழந்தவர் ஆகிய மூவருமே இல்வாழ்வானின் துணையைப் பெறுதற்குரியராவர். இதனை

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு [212]

என்ற குறட்பாவால் உணரலாம்

மேற்குறித்த மூவருக்கும் துணையாதல் இல்வாழ்வனின் கடமையாம்.

(தொடரும்)

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல் வெட்டு கலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடி தாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	100 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6 00
கபிலர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4 00
நக்கீரர்—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2 00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0 75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

எழுத்ததிகாரம்	ரூ.	40 00
சொல்லதிகாரம்	ரூ.	45 00
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	ரூ.	7 50
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4 50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர் - 613 002.

Regd. No. TN/TJ/24

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு நூலகர்

அவர்கள்

அரசினர் கீழ்த்திசைச் சுவடி

சென்னை

600 005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுவோர் : திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.,
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர் - 613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837 / 1, மேலராஜ வீதி,
தஞ்சாவூர் - 613 009.